OPTICIANS
SIGHT TESTED
PRESCRIPTIONS
ACCURATELY
DISPENSED
S. M.
FERNANDO
580, HOSPITAL ROAD
(Near Bank of Ceylon)
JAFFNA.

பக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

கண் வைத்திய நிபுணர்கள் சிபார்சு செய்யும் கண்ணாடிகளை சரியாக வழங்குபவர்கள்
எஸ். எம். பெர்னாண்டோ
580, ஆஸ்பத்திரி வீதி,
(இலங்கை வங்கிக்கு அருகில்)
யாழ்ப்பாணம்.

சுடர் 10 திருவள்ளுவர் ஆண்டு 2026 தை 29 ஞாயிற்றுக்கிழமை (12 – 02 – 1995) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 80

## கல்வி மேம்பாட்டுப் பேரவைப் பரிசளிப்பில் தமிழ்ச்செல்வன்

# போர் இடைநிறுத்த உடன்பாடு குறித்து தெளிவான விளக்கம் தர அரசு தாமதம்

## அந்த மௌனம் கலைந்தாலே கண்காணிப்புக் குழுக்கள் இயங்கும்

யாழ்ப்பாணம், பெப்ரவரி 12

போர் இடைநிறுத்த உடன்பாடு சம்பந்தமாக அரசாங்கம் புதிதாக இரண்டு நிபந்தனைகளை விதித்துள்ளது. இவை சம்பந்தமான தெளிவான விளக்கம் தருமாறு நாம் அரசிடம் கோரிக்கை விடுத்தோம். ஆனால் விளக்கம் தருவதை அரசு தாமதித்து வருகிறது; மௌனம் சாதிக்கிறது.

இது விடயத்தில் அரசின் மௌனம் கலைந்தால் மட்டுமே கண்காணிப்புக் குழுக்கள் இயங்க வாய்ப்பு உண்டு.

இவ்வாறு தகவல் வெளியிட்டார் தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் பொறுப்பாளர் திரு. சு. ப. தமிழ்ச்செல்வன்.

தமிழீழக் கல்வி மேம்பாட்டுப் பேரவையினர் நேற்று நடத்திய பரிசளிப்பு விழாவில் சிறப்புரை ஆற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி குமாரசாமிமண்டபத்தில் தமிழீழக் கல்வி மேம்பாட்டுப் பேரவையின் தலைவர் வண. பிரான்சிஸ் யோசவ் அடிகளார் தலைமையில் நேற்றுக் காலையில் இப்பரிசளிப்பு விழா நடைபெற்றது.

திரு தமிழ்ச்செல்வன் அங்கு சிறப்புரை ஆற்றுகையில் கூறியதாவது:–

போர் இடைநிறுத்த உடன்பாடு தொடர்பாக மேலும் சில தெளிவான விளக்கங்களை பெற்ற பின்னரே கண்காணிப்புக் குழுவில் தாம் பங்குபற்ற முடியும் என அண்மையில் யாழ்ப்பாணம் வந்த கண்காணிப்பு குழுவின் வெளிநாட்டுப் பிரதிநிதிகள் தெரிவித்தனர்.

அதற்கமைய போர் இடைநிறுத்த உடன்பாடு தொடர்பாக தெளிவான விளக்கத்தை தருமாறு விடுதலைப் புலிகள் விடுத்த கோரிக்கைக்கு அரசாங்கம் இதுவரை பதில் தராமல் மௌனம் சாதித்து வருகிறது

### இரண்டு நிபந்தனைகள்

போர் இடைநிறுத்த உடன்பாட்டின் படி கடலில் மீனவர்கள் மீன் பிடிப்பதற்கு உரிமை அளிக்கப்பட்டுள்ளது. போராளிகள் ஆயுதங்களுடன் நடமாடக் கூடாது என எந்த சொற் பிரயோகமும் உடன்பாட்டில் குறிப்பிடப்படவில்லை.

இந்நிலையில் இவ்விரு விடயங்களிலும் அரசு புதிதாக நிபந்தனைகளைப் போட்டிருப்பதை கண்காணிப்பு குழுவின் வெளிநாட்டுப் பிரதிநிதிகள் இங்கு வந்த பின்னரே அறிந்து கொண்டனர்.

அதன் பின்னர் அவர்கள் தமக்குள் கலந்துரையாடினர்.

போர் இடைநிறுத்த உடன்பாடு இரு தரப்பினராலும் செய்யப்பட்டிருப்பினும் அரச தரப்பினரிடமிருந்து மேலும் தெளிவான பதில் வரும்வரை

(6 ஆம் பக்கம் பார்க்க)

### தாண்டிக்குளத்தில்

## 7 ஆயிரம் பென்டோர்ச் பற்றறிகள் பறிமுதல்

கொழும்பு, பெப். 12

வவுனியாவில் இருந்து வடக்குக்கு கடத்த முயற்சித்த ஏழாயிரத்து 300 பென்டோர்ச் பற்றறிகளை தாண்டிக்குளத்தில் வைத்து படையினர் கைப்பற்றியுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தக் கடத்தலில் ஈடுபட்டதாகச் சந்தேகத்தின் பேரில் இருவர் படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பற்றறிகள் வடபகுதிக்கு எடுத்துச் செல்வதற்கு தடை நீக்கப்பட்டிருந்த போதும், பென்டோர்ச் பற்றறிகளுக்கு தடை இருப்பது தெரிந்ததே. (ஓ-3)

## பொலன்னறுவையை தாக்க புலிகள் திட்டம்

### சிங்களப் பத்திரிகை தகவல்

கொழும்பு, பெப். 12

பொலன்னறுவ பகுதியை தாக்கப்புலிகள் திட்டமிட்டுள்ளனர் என்று 'லங்கா தீப' பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

இந்தத் திட்டம் குறித்து பாதுகாப்புப் படைகளுக்கு தகவல் கிடைத்துள்ளதாகவும்—

அதைத் தொடர்ந்து அந்தப்பகுதியில் பாதுகாப்பு பலப்படுத்தப் பட்டுள்ளதாகவும்— அந்தப் பத்திரிகை தகவல் வெளியிட்டுள்ளது. (ஓ-3)

## சினிமா நடிகரும் விசாரணையில்

கொழும்பு, பெப். 12

சண்டே லீடர் வார இதழின் ஆசிரியர் லசந்த விக்கிரமதுங்காவும் அவரது மனைவியும் தாக்கப்பட்ட சம்பவம் தொடர்பாக சினிமா நடிகர் சனத் குணதிலகாவிடமிருந்து மிரிஹானைப் பொலிஸார் வாக்கு மூலத்தைப் பெற்றுள்ளனர்.

தாம் தாக்கப்பட்ட சம்பவம் குறித்து செய்திருந்த முறைப்பாட்டில் நடிகர் சனத் குணதிலகா பற்றியும் லசந்த விக்கிரமதுங்கா குறிப்பிட்டிருந்தார் என்று தெரிவிக்கப் பட்டுள்ளது. (இ-ஐ-6)

## மன்னிப்புச் சபையின் பிரதிநிதிகள் கொழும்பில்

சர்வதேச மன்னிப்புச் சபையின் பிரதிச் செயலாளர் நாயகம் டேக் லிவோன் தலைமையிலான 3 உறுப்பினர்களைக் கொண்ட குழு ஒன்று கொழும்பு வந்துள்ளது.

1988 ஆம் ஆண்டு பெப்ரவரி முதலாம் திகதி தொடக்கம் நாட்டில் இடம்பெற்ற காணாமல் போனோர் சம்பவங்கள் பற்றியும், சட்ட விரோத மரண தண்டனை மற்றும் படு

(6 ஆம் பக்கம் பார்க்க)

### முச்சந்தி முரளி



மோதல் தவிர்ப்பையும் மறந்து போனார் போல...!

## ஐ. தே. க வின் தேசிய பட்டியல் எம். பிக்கள்

கொழும்பு, பெப். 12

காலியாக உள்ள ஐ.தே.கட்சியின் இரு தேசியப் பட்டியல் எம். பி பதவிகளுக்கு சரத் கொங்கஹே, தினேஸ் தொடங்கொட ஆகிய இருவரையும் நியமிப்பதற்கு தீர்மானிக்கப் பட்டிருப்பதாகத் தெரிவிக்கப் பட்டுள்ளது.

'சிறிகொத்த' வட்டாரங்களை மேற்கோள் காட்டி சிங்களப் பத்திரிகை ஒன்று இத் தகவலை வெளியிட்டுள்ளது. (இ-ஐ-6)

## கனவில் புலிகளைக் கண்ட சிப்பாய் துப்பாக்கி வேட்டு!

### கடமையில் இருந்த சகா பலி

கொழும்பு, பெப். 12

''சென்றி'' கடமையில் இருந்த சிப்பாய் கண்ணயர்ந்து போனார். கனவு வந்தது. கனவில் புலிப் போராளிகள் வந்தனர். திடுக்கிட்டுப் போனார் சிப்பாய் துப்பாக்கி எடுத்து தீர்த்தார் வேட்டுக்களை.

வேட்டுக்கள் முழங்கி ஓய்ந்தன. சுயஉணர்வு பெற்றார் சிப்பாய்.

அருகில் தமது சகா ஒருவர் வேட்டுக்கு இலக்காகி துடி துடித்துக் கொண்டிருக்கிறார் சிறிது நேரத்தில் சூடுபட்ட சிப்பாய் அமைதியாகி விடுகிறார். அவர் உயிர் பிரிந்து விடுகிறது.

கிழக்கில் அதாவெட்டுனுவவ இராணுவ முகாமில் அண்மையில் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது [ஓ-3]

# எதிரிக்கு பாடம் புகட்ட படையினர் தயார் நிலையில் இருக்க வேண்டும்

## பி.பி.ஸிக்கு ஹமில்டன் பேட்டி

கொழும்பு, பெப். 12

எதிரியின் நடவடிக்கைகள் குறித்து படையினர் எந்நேரமும் விழிப்பாக இருக்க வேண்டும். அவர்கள் மீண்டும் எமது பகுதியை ஆக்கிரமிக்க முயன்றால் நல்ல பாடம் படிப்பிக்க தயாராக இருக்க வேண்டும்.

பதவி விலகிய பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஜெனரல் ஹமில்டன் வனசிங்க பி. பி. ஸிக்கு அளித்த பேட்டியில் இவ்வாறு தெரிவித்தார்.

கேள்வி:– பாதுகாப்புத் துறையில் 40 வருடகால அனுபவம் உள்ள நீங்கள் ஈழப் போரை எவ்வாறு நோக்குகிறீர்கள்?

ஹமில்டன்:– எதிரிகளைப் பல வீனப்படுத்தி பேச்சுவார்த்தை மூலமே தீர்வு ஒன்றைக் காணமுடியும். எதிரிகளுக்கு இந் நாட்டில் மட்டுமல்லாது உலகின் எல்லாப் பகுதியில் இருந்தும் ஆதரவும் உதவியும் வாரி வழங்கப்படுகின்றன. அவர்களின் பிரசாரப் பணியும் மிகவும் முன்னேற்றமானதாக உள்ளது.

ஆயினும் எமது இராணுவம் அவர்களைச் சந்தித்து தோற்கடிக்கக் கூடிய சக்தியைக் கொண்டது. ஆனால் அது உடனடியாகச் செய்யக் கூடிய ஒன்றல்ல.

கெரில்லா போராட்டங்களை பொதுவாக நீண்ட காலத்துக்கு சண்டையிட்டே தோற்கடிக்க முடியும்.

கிழக்கில் அவர்களின் பலத்தை இழக்கச் செய்து அங்கு சிவில் நிர்வாகத்தை மீள அமைப்பதில் நாம் வெற்றி கண்டோம்.

அதன் பின் வவுனியாவில் இருந்து வடக்கு நோக்கி குடா நாடுவரை முன்னேறி அவர்களின் பலத்தை இழக்கச் செய்வதிலும் குறிப்பிடக் கூடிய அளவு வெற்றியீட்டியுள்ளோம்.

கேள்வி:– பலமுறை யுத்த நிறுத்தம் ஏற்பட்டது. அச் சந்தர்ப்பங்களைப் பயன்படுத்தி விடுதலைப் புலிகள் தங்களைப் பலப்படுத்தி வருகின்றனர்—எனச் சொல்லப்படுகிறது. நீங்களும் இதே நிலைப்பாட்டை கொண்டுள்ளீர்களா?

ஹமில்டன்:– ஆம். ஆயினும் மாபெரும் மக்கள் ஆணையைப் பெற்ற அரசு சமாதானத்தை ஏற்படுத்த முயற்சிக்குமாயின் அதற்கு அனைத்து மக்களும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும். இராணுவமும் அதற்கு ஒத்துழைப்பு வழங்கும். எனினும் எதிரியைச் சந்திப்பதற்கு இராணுவம் எவ்வேளையும் தயாராக இருக்கிறது என்றே நான் எண்ணுகிறேன்.

(6 ஆம் பக்கம் பார்க்க)

## ஹமில்டன் கடவுச்சீட்டை பறிக்க அதிகாரிகள் முயற்சி

### சந்திரிகா தலையிட்டு தடுத்தார்

கொழும்பு, பெப். 12

தமது கடவுச் சீட்டை பறிமுதல் செய்ய சில அரச அதிகாரிகள் எடுத்த முயற்சியை ஜனாதிபதி தலையிட்டு தடுத்து நிறுத்திவிட்டார் என்று ஜெனரல் ஹமில்டன் வனசிங்கா தெரிவித்தார்.

பி. பி. ஸி சிங்கள சேவைக்கு நேற்று அளித்த பேட்டியின் போது இத்தகவலை அவர் வெளியிட்டார்.

எனது கடவுச்சீட்டை பறிமுதல் செய்ய முயற்சிக்கப் பட்டது. அது குறித்து ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவைச் சந்தித்து பேசினேன். நான் ஒரு குற்றவாளி அல்ல

(6 ஆம் பக்கம் பார்க்க)

## வட-கிழக்கு தபால்சேவை சீர்செய்ய நடவடிக்கை

### தபால் மா அதிபர் தகவல்

கொழும்பு, பெப். 12

வடக்கு கிழக்கு மாகாணத்துக்கு தபால் பொதிகளை அனுப்பிவைப்பதில் தபால் திணைக்களம் பல சிரமங்களை எதிர்நோக்குவதாக தபால் மா அதிபர் திருமதி எச். எம். எஸ். கொட்டகதெனிய தெரிவித்துள்ளார்.

தேசிய விமான தபால் சேவை அடுத்த மாதம் ஆரம்பிக்கப்பட்ட பின்னர் இந்தநிலைமை சீராகும் என்றும் அவர் கூறியுள்ளார்.

தேசிய விமான தபால் சேவையை ஆரம்பிப்பதற்கு அரசு உத்தேசித்துள்ளது. இலங்கை விமானப்படையும், விமான சேவை நிறுவனங்களும் இணைந்து தேசிய விமான தபால் சேவையை மேற்கொள்ளும்.

## அரசு-புலிகள் சமாதானப் பேச்சை அமெரிக்கா உறுதியாக ஆதரிக்கிறது

### தெற்காசிய செயலாளர் தெரிவிப்பு

வாஷிங்டன், பெப். 12

இலங்கை அரசாங்கத்துக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே தற்போது நடைபெறும் சமாதானப் பேச்சு வார்த்தைகளை அமெரிக்கா உறுதியாக ஆதரிக்கிறது.

—அமெரிக்க வெளி நாட்டு அமைச்சின் தெற்காசிய பிரிவுக்கான உதவிச் செயலாளர் திருமதி றொபின் றபீல் முன்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அமெரிக்க செனட் சபையின் ஆசிய பசுபிக் தொடர்பான சர்வதேச உறவுகள் உபகுழுவின் முன்னிலையில் உரையாற்றிய போதே திருமதி றபீல் இதனை அறிவித்தார்.

இந்த ஆண்டின் அமெரிக்க கொள்கை பற்றிய தனது உரையில் அவர் மேலும் தெரிவித்ததாவது:–

பொது மக்கள் ஐக்கிய முன்னணி அரசு துணிச்சலுடனும்,

[6 ஆம் பக்கம் பார்க்க]

### பாஸ்போட் மோசடியில் ஈடுபட்ட

## சீனப்பெண் ஒருவர் நுகேகொடையில் கைது

### இன்டர் போல் பொலீஸ் விசாரணை

கொழும்பு, பெப். 12

சர்வதேச ரீதியில் பாஸ்போர்ட் மற்றும் விசா மோசடிகளில் ஈடுபட்டதாகக் கூறப்படும் சீனப் பெண் ஒருவரை, சர்வதேசப் பொலீஸாரின் கோரிக்கைக்கு இணங்க ஸ்ரீலங்கா இரகசியப் பொலீஸார் கைது செய்தனர்.

லோ சிங் சிங் அல்லது அஞ்சில் என்று அழைக்கப்படும் இந்தப் பெண்ணை ஹொங்கொங் பொலீஸார் கொடுத்த தகவலின் பேரில் நுகேகொடை பொலீஸ் பிரிவில் வைத்து இரகசியப் பொலீஸார் கைது செய்தனர்.

சீன இளைஞர்களையும் யுவதிகளையும் மேற்கத்திய நாடுகளுக்கு அனுப்புவதற்காகப் போலி ஆவணங்களைச் சமர்ப்பித்து ஸ்ரீலங்காவுக்குக் கடத்தி வந்தார் என்பது உட்பட பல்வேறு குற்றச்சாட்டுக்கள் இவர் மீது சுமத்தப்பட்டுள்ளன.

சர்வதேச போதைப் பொருள் கடத்தல் கும்பலான மாபியாவுடனும் இவ

(6 ஆம் பக்கம் பார்க்க)

## கொப்பே, லலித் கொலைகள் குறித்து விசாரிக்க விசேட ஆணைக்குழு

கொழும்பு, பெப். 12

முன்னாள் இராணுவத் தளபதி லெப். ஜெனரல் டென்சில் கொப்பேகடுவ உட்பட 10 படையினர் கொல்லப்பட்ட [illegible] கண்ணிவெடிச் சம்பவம் குறித்தும் —

முன்னாள் அமைச்சர் லலித் அத்துலத்முதலி கொலைச் சம்பவம் குறித்தும் புதிதாக விசாரணை நடத்துவதற்காக விசேட ஜனாதிபதி ஆணைக் [illegible] துள்ளது.

இஸடயஸ் பண்டாரநாயக்கா, மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதி டி. பி. எஸ் குணசேகர, மேல் நீதிமன்ற நீதிபதி நிமால் காமினி அமரதுங்கா ஆகியோர் இக்குழுவில் இடம் பெற்றுள்ளனர்.

(6 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெற்றோலிய கூட்டுத் தாபனத்துக்கு முப்படைகள் 70 கோடி ரூபா நிலுவை!

கொழும்பு, பெப். 12

இராணுவம், கடற்படை, விமானப்படை ஆகியவை எரிபொருள் கொள்வனவு செய்த வகையில் 70 கோடி ரூபா பணத்தை இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்துக்கு நிலுவையாகச் செலுத்தவேண்டியுள்ளது.

தற்போது பெரும்நிதி நெருக்கடியை எதிர்நோக்கியிருக்கும் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்துக்கு முப்படைகள் தமது நிலுவைகளைச் செலுத்தாமல் இருப்பது மேலும் நெருக்கடியைத் தோற்றுவித்திருப்பதாகக் கூறப்படுகின்றது.

## படை அதிகாரிகள் பாராமுகம்

இராணுவம் 40 கோடி ரூபாவும், கடற்படை, விமானப்படை ஆகியவை 30கோடி ரூபாவும் செலுத்தவேண்டியிருக்கின்றது.

இது குறித்து பல தடவைகள் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு நினைவூட்டல் கடிதங்கள் அனுப்பப்பட்ட போதிலும், அவற்றை அதிகாரிகள் கவனத்தில் எடுக்கவில்லை என்றும், பதில் கூடத் தரவில்லை என்றும் பெற்றோலியக் கூட்டுத் தாபன அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

ரயில்வேத் திணைக்களமும் பத்துக்கோடி ரூபாவை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்துக்கு செலுத்தவேண்டியுள்ளது. (உ)

## கப்பலில் வந்த திரிபோஷா காலாவதியாகும் நிலையில்

### உடன் விநியோகிக்க நடவடிக்கை

யாழ்ப்பாணம், பெப். 12

யாழ். சுகாதார திணைக்களத்திற்கு ''குமண'' கப்பலில் வந்து சேர்ந்த குழந்தைகளுக்கான திரிபோஷா பைக்கற்றுக்கள்காலாவதியானவை என்று தெரிவிக்கப்பட்டது.

இக் கப்பலில் 60 ஆயிரம் திரிபோஸா மா பைக்கற்றுக்கள் வந்து சேர்ந்தன.

கப்பலில் இருந்து இறக்கப்பட்டு சுகாதார திணைக்களத்திற்கு எடுத்து வரப்பட்ட பின்னரே அவை இம்மாதத்துடன் காலவதியாகிறது என்று தெரியவந்தது.

இந்த திரிபோஷா பைக்கற்றுக்களை உடனடியாக விநியோகிப்பதற்கான நடவடிக்கைகளை சுகாதார திணைக்களம் மேக்கொள்டுள்ளது. (ஓ-17)

## கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், பெப். 12

'தமிழ் மக்களின் இன்றைய நலன்' என்ற தலைப்பிலான கருத்தரங்கு ஒன்று இன்று முற்பகல் 11 மணிக்கு யாழ். இந்துக் கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

வெகுஜன அமைப்புக்களின் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் நடைபெறவுள்ள இக் கலந்துரையாடலில் வெகுஜன அமைப்புகளின் உறுப்பினர்கள், பொது ஸ்தாபனங்கள், வர்த்தக சங்கம், கூட்டுறவுச் சங்கம், கடற்றொழிலாளர் சங்கம், அரச திணைக்கள, கூட்டுத்தாபன ஊழியர் நலன் புரி மற்றும் தொழிற்சங்கங்கள் ஆகியவற்றின் தலைவர்கள், செயலாளர்கள், பொது முகாமையாளர்கள், நிர்வாக உறுப்பினர்கள் மற்றும் ஆர்வலர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. [ஐ]

## றோயல்-ஆனந்தா மாணவர் மோதல் தொடர்கிறது!

### வீதிகளிலும் சச்சரவு நடக்கிறது

கொழும்பு, பெப் 12

கொழும்பில் பிரபல்யமான கல்லூரிகளான றோயல் — ஆனந்தா கல்லூரி மாணவர்களிடையே மோதல்கள்இடம் பெற்று வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்விரு கல்லூரி அணிகளுக்கும் இடையில் கிரிக்கெட் போட்டியில் ஏற்பட்ட மோதல் தற்சமயம் வீதிகள், ரயில் நிலையங்களுக்கு விரிவடைந்துள்ளதாகவும்—

றோயல் மாணவர்களை தேடிப்பிடித்துஆனந்தா ஆதரவு கோஷ்டி பதுங்கியிருந்து தாக்குவதாகவும்—

கோட்டை, றாகம ரயில் நிலையங்களில் இத் தாக்குதல்கள் அதிகரித்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

மாணவர்களை பாதுகாக்க பொலீஸ் உதவி கோரப்பட்டுள்ளது. [ஓ-3]

## பலப்பிட்டிய பிரதேச சபை

## கூட்டத்தில் அமளி துமளி; கதிரைகள் பறந்தன!

கொழும்பு, பெப்.12

பலப்பிட்டிய பிரதேச சபைக் கூட்டம் பெரும் அமளி துமளியில் முடிவடைந்தது.

அண்மையில் நடைபெற்ற இக்கூட்டத்தின் போது ஐ. தே. க. உறுப்பினர் ஒருவர் மேசையின் மேல் ஏறி நின்று உரையாற்ற முயன்றார் அதற்கு எதிர்க்கட்சியினர் கடும் எதிர்ப்புத் தெரிவித்தனர்.

அதையும் பொருட்படுத்தாது அவர் மேசையின் மேல் ஏறி நின்று பேசிக் கொண்டிருந்தமையடுத்து, சபையில் பெரும் மோதல் ஏற்பட்டது. சில பிரதேசசபை உறுப்பினர்கள் அவர் மீது தாக்குதல் மேற்கொண்டனர்; சபையிலிருந்த கதிரைகள் அங்கும் இங்கும் பறந்தன.

வெளியில் நின்ற மக்கள் கூட்டம் சபையில் நடப்பதைப் பார்த்துக் கொண்டிருந்தது.

அமளியை அடுத்து கூட்டம் ஒத்திவைக்கப்பட்டது. [உ]

## செல்வாவின் செய்தி

5-2-95 ஆம் திகதிய உதயனில் வெளியான—

''ஒற்றையாட்சியையும் சிங்கக் கொடியையும் ஈழத் தமிழர் என்றும் எதிர்த்தே வந்துள்ளனர்'' என்ற தலைப்பில் வெளியான கட்டுரையில்—

தந்தை செல்வா தெரிவித்ததாக ஐந்தாவது பந்தியில் உள்ள கருத்து—

1948ஆம் ஆண்டு பெப்ரவரி 4 ஆம் திகதி வெளிவந்த '' வீரகேசரி '' சுதந்திரதின சிறப்பு மலருக்கு அவர் வழங்கிய செய்தியாகும்.

பிரித்தானியப் பேரரசின் குடியேற்ற நாடுகளின் செயலாளருக்கு அனுப்பிய தந்திச் செய்தியல்ல என்று கட்டுரையாளர் அறிவிக்கிறார்.


இலங்கை
இளங்கலைஞர்
மன்றத்தின்
15ஆவது இசை விழா

கலா மண்டபம் - சட்டநாதர் வீதி, நல்லூர்.

2ஆம் நாள் 12 - 02 - 1995
ஞாயிற்றுக்கிழமை

ஈ. எஸ். பேரம்பலம்
ஸ்தாபனத்தாரின் ஆதரவில்

மாலை
4-00 — 5-00 மங்கல இசை
ஆர் சிவகுமார், என். யோகநாதன் — நாதஸ்வரம்
வீ. சபேசன், வீ. கண்ணன் — தவில்

5-00 — 5-20 பாட்டு
த. தர்மினி, கோ. மயூரி
மு. நர்மதா, க. தர்ஷினி
சி. அனிதா, து. காயத்ரி
சுபத்திரா கணேசன் — வயலின்
ஜீட்ஜெமில்ராஜ் — மிருதங்கம்

5-20 — 5-40 மிருதங்க இசை
சு. கமலதாஸ்
ம. குலேந்திரன்
செ. டெனியசோதரன்

5-40 — 6-10 பல்லியம்
கே. சுதர்சினி, பி. விதுஷா, ஏ. மைதிலி, என். சுபாஜினி, எம். உமையாள், எஸ். லட்சுமி, எஸ். சர்வலோகநாயகி — வீணை
கே. சுவர்ணாங்கி, எஸ். யசோதேவி, எஸ். சுமங்கலி, கே. வானதி — வயலின்
எல். தாஷாயணி — புல்லாங்குழல்
எஸ். துரைராஜா — மிருதங்கம்
ஏ. செல்வரத்தினம் — தபேலா

6-10 — 6-55 பாட்டு
சௌந்தராம்பிகை தியாகராஜா — பாட்டு
எஸ். வெங்கடேஸ்வர சர்மா — வயலின்
எஸ். பாலச்சந்திர சர்மா — மிருதங்கம்

6-55 — 7-40 பாட்டு
ரி. கருணாகரன் — பாட்டு
ஆர். எஸ். கேசவமூர்த்தி — வயலின்
கே. கண்ணதாஸன் — மிருதங்கம்

7 40 — 8-00 மங்கல விளக்கேற்றல்
திரு. பே. நாகரத்தினம் அவர்கள் (ஈ. எஸ். பி.)
திரு த. சற்குணராசா அவர்கள் (திருமாட்டி புடைவையகம்)
திரு. இ. மகேந்திரன் அவர்கள் (ஈ. வி. மகால் கருங்காலி, காரை.)
திரு. எஸ் தியாகராசா அவர்கள் (சஞ்சீவி பெயிற் கவுஸ்)

★ அருளுரை
சிவஸ்ரீ தாணுநாத வாசுதேவக் குருக்கள் அவர்கள்
(பிரதமகுரு, சிவன் கோயில், பருத்தித்துறை)

★ தலைவர்
திரு. இராமதாஸ் அவர்கள்
(மராமத்து பொறியியலாளர்)

★ முதன்மை விருந்தினர்
திரு. வே. பொ. பாலசிங்கம் அவர்கள்
(மாநகரசபை ஆணையாளர்)

★ சிறப்பு விருந்தினர்
திரு. த. அன்னலிங்கம் அவர்கள்
(தலைவர், யாழ். வர்த்தகர் சங்கம்)

8-00 — 9-00 இருவயலினிசை
எஸ். சர்வேஸ்வர சர்மா, ஏ. ஜெயராமன் — வயலின்
எஸ். நாகராஜன் — மிருதங்கம்
சதாவேல்மாறன் — கடம்

9 00 — 10-15 வில்லிசை
கலாவினோதன் சின்னமணி குழுவினர்

வாழ்த்துவோர்:
அன்பு அழகுச் சோலை (சோமன்ஸ்)
48, சந்தோசம் தெரு, யாழ்ப்பாணம்.
[சி-541]



G.C.C. வைத்திய நிபுணர் ஆலோசனை நிலையம்
5/4/14, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

பல், கண், மூக்கு, தொண்டை, காது [E. N. T], முறிவு, மகப்பேறு, சத்திரசிகிச்சை, சிறுபிள்ளைக்குரிய வைத்தியம், சருமநோய்கள் என்பவற்றிற்கு விசேட வைத்திய நிபுணர்களால் ஆலோசனை வழங்கப்பட்டு வருகின்றது. புதிய அறிமுகம்; பல் சிகிச்சை நேரம்: தினமும்காலை9-00 — ந. ப. 12 00, மாலை 2-00 — 5-00வரை. ஞாயிறு தினங்களில் பாடசாலை பிள்ளைகளுக்கு இலவசம்.

[யாழ். அரசாங்க வைத்தியசாலை பழைய O. P. D. முன்பாக]

(35165) — நிர்வாகி.



யாழ். செங்குந்த இந்துக் கல்லூரி
★ வைர விழா ★
நன்றி நவில்கின்றோம்

கடந்த 3 ஆம், 4 ஆம், 5 ஆம் திகதிகளில் நடைபெற்ற எமது கல்லூரியின் வைர விழா சிறப்புற நடைபெற ஒத்துழைத்த அனைவருக்கும் எமது உளங் கனிந்த நன்றிகளைத தெரிவித்துக்கொள்கிறோம்.

மூன்று நாள் விழாவிலும் பிரதம விருந்தினர்களாகவும், சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்து கொண்ட பெரியோர்கள் மற்றும் விழா நிகழ்ச்சிகளில் பங்கு கொண்ட கலைஞர்கள் —

விழாவை ஒட்டி நடத்தப்பட்ட போட்டிகளில் பங்கு பற்றிய விளையாட்டு வீரர்கள், விழாவுக்கு முழு ஒத்துழைப்புத் தந்த கல்லூரி அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், மாணவ முதல்வர்கள் சாரணர்கள் —

விழாக் காலத்தில் சேவையாற்றிய தமிழீழ காவல்துறையினர், நல்லூர் திரிசாரணர் குழுவினர்.

மூன்று நாள் நிகழ்வும் சோபிக்க ஆதரவு அளித்த நிறுவனங்கள் —

வைர விழா சிறப்பு மலருக்கு ஆக்கங்கள், ஆசிச் செய்திகள், விளம்பரங்கள் தந்துதவியவர்கள் —

உதவி புரிந்த சனசமூக நிலையங்கள், ஒலி - ஒளி வழங்கியோர் மற்றும் பல வழிகளிலும் உதவிய அன்புள்ளங்கள், வெளி நாடுகளில் வாழும் பழைய மாணவர்கள் அனைவருக்கும் நன்றி கூறுவதில் நிறைவடைகிறோம்.

சி. பத்மராஜா,
செயலாளர்
பழைய மாணவர் சங்கம்

விழா சிறப்புற ஆதரவு நல்கியோர்

★ வீடியோ ஷண் ★ நல்லூர் மார்க்கட்.
★ சீதாஸ் ஸ்ரோர்ஸ் ★ திருநெல்வேலி.
ராம்கரன் பொத்தகசாலை நவீன சந்தை, திருநெல்வேலி.
★ குறிஞ்சி பார்மசி ★ திருநெல்வேலி,
விதரன் புடைவை அகம் நவீன சந்தை, திருநெல்வேலி.
அரவிந் வீடியோ சவுண்ட் சேர்விஸ் யாழ்ப்பாணம்.
[சி-544]


## 31ஆம் நாள் நீங்காத நினைவினிலே...

தோற்றம்: 02-02-1907

மறைவு: 13-01-1995

### அமரர் அப்புக்குட்டி சின்னத்தம்பி

எங்கள் ஐயா!

பட்டியோலைச் சின்னத்தம்பி எங்கள் ஐயா!
பண்புடைச் செம்மல் பாரினில் தோன்றினார் ஐயா!
எல்லோர் சிந்தையும் கலங்கவிட்டு சென்றார் ஐயா!
எம்மீசன் பொற்பாதம் பற்றினரோ எங்கள் ஐயா!

எங்களை ஆழ்ந்த கவலைக்குள் மூழ்கவிட்டு இறைபதம் எய்திய ஐயாவின் ஆத்ம சாந்திக்காய் இறைஞ்சுகின்றோம்.

ஓம் சாந்தி!

மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள், உற்றார் உறவினர்கள்.

புஸ்பராசா வீதி.
உடுவில் தெற்கு.

[7898]

## 45-ம் நாள் நினைவஞ்சலி



அன்னை மடியில்: 10 — 03 — 1976

ஆண்டவன் அடியில்: 30 — 12 — 1994

செல்வி
### கல்பனா தெட்சணாமூர்த்தி
(யா/மானிப்பாய் மெமோறியல் கல்லூரி மாணவி)

எங்கள் அன்புக் கல்பனாவே!

எங்கே அம்மா எம்மை விட்டுப் போனாய்
பத்து மாதம் சுமந்து
பதினெட்டு ஆண்டு வரை வளர்த்து
எடுத்த உன் தாய் தந்தை ஊண் இன்றி
உறக்கம் இன்றி உன்னையே நினைத்து
உருகுவதை யாருக்கம்மா தெரியப் போகிறது.

எங்கள் அன்புத் தங்கையே!

எம்முடனே விளையாடி
எம்முடனே உணவருந்தி
உன்னைவிட நான் படிப்பேன் - என்று
போட்டி போட்டு படித்த தங்கையே!
எங்கு எங்களை எல்லாம் விட்டு
தனியாக சென்றாய் அம்மா
ஆண்டுகள் பல சென்றாலும் - உன்
நினைவுகள் எம்மனதில் நிழலாடுமம்மா!

உன் பிரிவால் வாடும்:
அப்பா, அம்மா, அக்கா: வனஸ்பதி (சுகந்தி), அண்ணன்மார்: காண்டீபன், கரிகாலன் (சவுதி அரேபியா), தயான் (காந்தன்), தம்பி: கவியரசன், அண்ணி: ஞானவாணி, மருமக்கள்: கிருசிகா, மியூசிகா, மதுசூதனன், உற்றார், உறவினர்கள்.

செ. தெட்சணாமூர்த்தி,
மண்டைதீவு - 8.

கொக்குவில் மேற்கு,
கொக்குவில்.

(35164)

## ௯-ம் ஆண்டு நினைவஞ்சலி



பிறப்பு: 03 — 10 — 1922

இறப்பு: 21 — 02 — 1986

திதி 12 - 02 - 1995

### திருமதி செ. தெய்வானைப்பிள்ளை

[ஓய்வுபெற்ற ஆசிரியர், அருணோதயக் கல்லூரி அளவெட்டி]

எங்கள் குடும்பத்தின் ஒளிவிளக்காய் திகழ்ந்து எம்மை பண்போடும் அறிவோடும் பாசத்தோடும் வழிநடத்திய எங்கள் அன்புத் தெய்வத்தின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பிரிவால் துயருறும்
கணவன், பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

செ. செல்வநேசன்,
கொலிஜ் வியூ,
அளவெட்டி.

[35156]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தியாவைப் பொறுத்த வரை இவ்வாரம் மூன்று முக்கிய சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன.

முன்னாள் மனிதவளத் துறை அமைச்சரும், பிரதமர் நரசிம்மராவ்வின் அரசியல் எதிரியுமான அர்ஜுன் சிங் காங்கிரஸ் கட்சியின் உறுப்புரிமை பதவியிலிருந்து நீக்கப்பட்டார்.

இவர் நீக்கப்பட்ட கையோடு இந்திய அமைச்சரவை விஸ்தரிக்கப்பட்டது. சிறிய அளவில் மாற்றமும் செய்யப்பட்டது.

அத்துடன் ஆறு மாநிலங்களுக்கான தேர்தல் வாக்களிப்பும் ஆரம்பமாகி உள்ளது.

இவை எல்லாம் மூன்று தினங்களுக்குள் நிகழ்ந்த சம்பவங்கள்.

73 வயது நிரம்பிய பிரதமர் நரசிம்மராவ்வுக்கு அக்னிப் பரீட்சையாகக் கருதப்படும் ஆறு மாநில சட்ட மன்றத் தேர்தல்களில் முதலாவது மாநில சட்டமன்றத் தேர்தல் வாக்களிப்பு மகாராஷ்டிர மாநிலத்தில் கடந்த புதன் கிழமை ஆரம்பமானது.

குஜராத், பீஹார், ஓரிஸ்ஸா அருணாச்சல், மணிப்பூர் ஆகியவை வாக்

## வெளி உலகில்

களிப்பு நடைபெற உள்ள ஏனைய மாநிலங்கள் ஆகும்.

காங்கிரஸைப் பொறுத்த வரை இவற்றுள் முதல் நான்கு மாநிலங்களும் அரசியல் முக்கியத்துவம் வாய்ந்தவை.

மேற்குக் கரையில் உள்ள மகாராஷ்டிராவும், குஜராத்தும் காங்கிரஸ் ஆட்சியில் இருந்தவை.

கிழக்குக் கரையில் பீஹாரும், ஓரிஸ்ஸாவும் ஜனதா தளத்தின் ஆட்சியில் இருந்தவை.

கடந்த டிசம்பர் மாதம் தென்னிந்திய மாநிலங்களான கர்நாடகம், ஆந்திரா உட்பட நான்கு மாநிலங்களுக்கு நடைபெற்ற சட்ட மன்றத் தேர்தல்களில் மூன்றில் காங்கிரஸ் தோல்வி கண்டது.

அந்த தோல்வியுடன் ஆரம்பித்தது தான் காங்கிரஸின் உள்கட்சிப் போராட்டம்.

இப்போராட்டம் முன்னரேயே இருந்தது தான். ஆனால் தேர்தல் தோல்வியின் பின்னரே அது பூதாகாரமாக வெடித்தது.

தமது அமைச்சர் பதவியை ராஜினாமாச் செய்த அர்ஜுன்சிங், பிரதமர் நரசிம்மராவ் தலைமையிலான காங்கிரஸ் கட்சி அரசியல் வங்குரோத்தத்தனம் அடைந்து விட்டதாக தெரிவித்து நாடு தழுவிய பிரசாரத்தை ஆரம்பித்திருந்தார்.

தற்போது மேலும் ஆறு மாநிலங்களுக்கான வாக்களிப்பு ஆரம்பித்துள்ள சமயம் அர்ஜுன்சிங், காங்கிரஸ் கட்சியின் உறுப்புரிமை பதவியிலிருந்து நீக்கப்பட்டிருக்கிறார். அமைச்சரவையும் விஸ்தரிக்கப்பட்டிருக்கிறது.

அர்ஜுன்சிங் வெளியேற்றத்தால் ஏற்பட்டுள்ள வாக்கு இழப்புக்களை அமைச்சரவை மாற்றம் மூலம் ஓரளவு நிவர்த்தி செய்யலாம் என்று நரசிம்மராவ் கருதுகிறார்.

### சோனியாவின் நெருங்கிய சகா

முன்னாள் அமைச்சர் அர்ஜுன்சிங், காங்கிரஸில் செல்வாக்குள்ளவராகக் கருதப்படும் சோனியா காந்தியின் நெருங்கிய சகாவாகக் கருதப்படுகிறார்.

சோனியா காந்திக்கு ஆதரவான சிலருக்கு அமைச்சரவையில் முக்கிய பதவிகளைக் கொடுப்பது மூலம் அர்ஜுன் சிங்கின் செல்வாக்கைக் குறைக்கலாம் என்று நரசிம்மராவ் நம்புவதாகத் தெரிகிறது. காங்கிரஸ் உறுப்புரிமை பதவியில் இருந்து அர்ஜுன்சிங் ஆறு வருட காலத்துக்கு இடைநிறுத்தப்பட்டுள்ளார்.

அர்ஜுன்சிங் மீதான குற்றச்சாட்டுக்கள் குறித்து அவரிடம் காங்கிரஸ் கட்சியின் ஒழுங்கு நடவடிக்கைக் கமிட்டி விளக்கம் கோரி இருந்தது.

அர்ஜுன்சிங்கின் விளக்கம் ஏற்றுக் கொள்ளப்படாததை அடுத்தே கட்சியில் இருந்து ஆறு வருட காலத்துக்கு அவரை இடை நிறுத்தி வைக்க தீர்மானிக்கப்பட்டது.

ஆந்திராவின் முன்னாள் முதலமைச்சரான விஜயபாஸ்கரரெட்டி (Vijay bhaskar-reddy) தலைமையிலான இந்த ஆறு அங்கத்தவர் கமிட்டியில் ஏ. கே. அன்ரனி தவிர்ந்த ஏனைய ஐவரும் அர்ஜுன்சிங்கின் வெளியேற்றத்துக்கு ஆதரவாக வாக்களித்தனர்.

சிவில் சப்ளை அமைச்சராக இருந்த ஏ. கே. அன்ரனி கடந்த டிசம்பரில் பல கோடி பெறுமதியான சீனி இறக்குமதி ஊழல் தொடர்பாக ராஜினமாச் செய்திருந்தார். எனினும் அவரின் ராஜினாமா இன்னும் பிரதமர் நரசிம்மராவ்வினால் ஏற்றுக் கொள்ளப்படவில்லை.

அர்ஜுன்சிங் மீதான நடவடிக்கையை சில வாரங்களுக்கு பின்போட வேண்டும் என்று ஒழுங்கு நடவடிக்கைக் குழுக் கூட்டத்தில் அன்ரனி தெரிவித்திருந்தார். எனினும் அது ஏற்றுக் கொள்ளப்படவில்லை

### நிரப்பப்படாத அமைச்சர் பதவிகள்

அமைச்சரவை மாற்றத்தில் உள்ள முக்கிய அம்சம் என்னவென்றால் அமைச்சர்கள் பதவிப் பிரமாணம் செய்து 24 மணித்தியாலத்தின் பின்பே அமைச்சர்கள் பட்டியல்வெளியானது தான்- அத்துடன் இன்னும் அமைச்சர் பதவிகள் பல நிரப்பப்படாமல் விடப்பட்டுள்ளன.

பிரதமர் ராவ்வின் நெருங்கிய அரசியல் நண்பரும் ராவ்வினால் ஆபத்து இல்லாதவர் என்று கருதப்படுபவருமான பிரநாப்முகர்ஜி வெளிநாட்டு அமைச்சராக நியமிக்கப்பட்டுள்ளார்.

இதுவரை வெளிநாட்டு அமைச்சராக இருந்த தினேஷ் சிங் கடந்த ஓராண்டு காலமாக சுகவீனமுற்றிருந்தார். எனினும் பதவி விலக அவர் தயக்கம் காட்டி வந்தார். அவர் தற்போது அமைச்சுப் பொறுப்புகள் அற்ற அமைச்சராக நியமிக்கப்பட்டுள்ளார்.

அதே சமயம் சுகாதார அமைச்சர் பதவி கடந்த இரண்டு மாதங்களாக நிரப்பப்படாதிருக்கிறது.

பாதுகாப்பு அமைச்சர் பதவி இரண்டு ஆண்டுகளாகவும் —

தொழில் துறை அமைச்சர் பதவி மூன்றரை ஆண்டுகளாகவும் — நிரப்பப்படாமல் இருந்து வருகின்றன.

நரசிம்மராவ்வின் எந்த நடவடிக்கையும் காங்கிரஸ் கட்சிக்கு உயிர் கொடுக்காது என்கிறார் அர்ஜுன் சிங்.

காங்கிரஸ் கட்சியின் கோட்டையாக விளங்கும் உத்தர பிரதேசத்தை காங்கிரஸ் ''கோட்டை'' விடுமானால் அதனால் எந்த ஒரு பொதுத் தேர்தலிலும் வெல்ல முடியாது என்று கூறுகிறார் அர்ஜுன்சிங்.

1947 ஆம் ஆண்டு இந்தியா சுதந்திரம் அடைந்த நாளிலிருந்து பெரும்பாலும் சகல பிரதமர்களையும் உத்தர பிரதேச மாநிலமே தந்துள்ளது.

தற்போதைய பிரதமர் நரசிம்மராவ் தென் இந்திய மாநிலமான ஆந்திர மாநிலத்தைச் சேர்ந்தவர்.

1977 ஆம் ஆண்டிலும் 1989 ஆம் ஆண்டிலும் மட்டுமே இந்தியாவில் மாற்றுக் கட்சிகள் ஆட்சியைக் கைப்பற்றின.

ஆனால் மொத்தமாக இந்தியா சுதந்திரம் பெற்ற பின்னர் காங்கிரஸ் அல்லாத கட்சிகளின் ஆட்சிக் காலம் சுமார் மூன்று ஆண்டுகள் மட்டுமே.

1977 ஆம் ஆண்டுத் தேர்தலில் இந்திரா காந்தியின் தலைமையில் காங்கிரஸ் தோல்வி அடைவதற்கு இந்திரா காந்தியின் கட்டாய கருத்தடைச் சட்டம், நெருக்கடி நிலை ஆட்சி ஆகியவையே காரணம் எனலாம்.

1989 இல் ராஜ்வ் காந்தி தலைமையில் ஏற்பட்ட தோல்விக்கு காங்கிரஸில் பொருளாதாரக் கொள்கை, நிர்வாக திறமை இன்மை காரணமாக இருந்தன.

இந்திரா காந்தி 1984 ஆம் ஆண்டு தனது மெய்ப்பாது காவலர்களான இரு சீக்கியர்களினால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

ராஜீவ் காந்தி 1991 தேர்தல் பிரசாரத்தின் போது தமிழ் நாட்டில் வைத்து மனித குண்டாகச் செயற்பட்ட பெண் ஒருவரினால் கொல்லப்பட்டார்.

### 1996 தேர்தல்

1996 ஜூன் மாதம் இந்தியாவில் பொதுத் தேர்தல் நடைபெற உள்ளது. தற்போது நடைபெற்று வரும் மாநில சட்ட மன்றத் தேர்தல் நரசிம்ம ராவ் தலைமையிலான காங்கிரஸ் கட்சியின் எதிர் காலத்தை நாடி பிடித்துக் காட்டப் போகிறது.

தற்போது நடைபெறும் மாநில சட்ட மன்றத் தேர்தல்களில் காங்கிரஸ் தோல்வி அடையுமானால் 109 வருட கால பழைமை வாய்ந்த காங்கிரஸ் கட்சியில் மேலும் பிளவு ஏற்படுவதைத் தவிர்க்க முடியாது என்று அவதானிகள் நம்புகின்றனர்.

அத்துடன் நாட்டின் பொருளாதாரச் சீர்திருத்தங்களுக்கும் அச்சுறுத்தல் ஏற்படலாம்.

இத் தேர்தல்களில் வெற்றி பெற்றால் மட்டுமே காங்கிரஸ் தலைமையில் நரசிம்ம ராவ் நீடிக்க முடியும்.

இத்தேர்தல்களின் முடிவில் பல மாநிலங்களில் கூட்டரசாங்கமே பதவிக்கு வர வாய்ப்பு இருந்து வருகிறது. அத்துடன் 1996 பொதுத் தேர்தலிலும் மத்தியில் தொங்கு நாடாளுமன்றம் (Hung Legislature) ஒன்றையே ஏற்படுத்தலாம் என்று ஊகிக்கப்படுகிறது

1991 ஜூன் மாதம் நரசிம்ம ராவ் பதவியேற்ற பின்னர் அவரது சுதந்திர சந்தை சீர்திருத்தக் கொள்கைகளே கட்சி செல்வாக்கு இழக்கக் காரணம் என்று நம்பப்படுகிறது.

1992 டிசம்பரில் அயோத்தியில் முஸ்லிம்களின் 400 வருட கால பழைமை வாய்ந்த பாபர் மசூதி இடிக்கப்பட்ட சம்பவம்—

தாழ்த்தப்பட்ட மக்களுக்கு வேலைவாய்ப்பு வழங்குவதில் சலுகை காட்டுவதற்கு காங்கிரஸ் கட்சிக்குள் இருந்து வரும் எதிர்ப்பு— ஆகியவை முஸ்லிம்களினதும் ஹரிஜன்ஸ் எனப்படும் தாழ்த்தப்பட்ட மக்களினதும் வாக்குகளை காங்கிரஸுக்கு இல்லாமல் செய்யலாம் என்று நம்பப்படுகிறது

பாபர் மசூதி இருந்த இடத்தில் மீண்டும் ஒரு கட்டடத்தைக் கட்டித் தருவதாக பிரதமர் நரசிம்மராவ் முஸ்லிம்களுக்கு உறுதி அளித்துள்ளார்.

எனினும் அது கட்டப்படுவதற்கான அறிகுறி எதுவும் இல்லை.

நரசிம்மராவ்வின் காலத்தில் அது கட்டப்படும் என்ற நம்பிக்கையும் முஸ்லிம்களுக்கு இல்லை.

இந்த நிலையில் ஏழை வாக்காளர்கள், தாழ்த்தப்பட்ட மக்கள் முஸ்லிம்கள் ஆகியோரின் வாக்குகளைப் படிப்படியாக இழந்துள்ளது நரசிம்மராவ் தலைமையிலான காங்கிரஸ் அரசாங்கம். காங்கிரஸ் வீழ்ச்சியடையுமானால் இந்தியாவில் மீண்டும் அரசியல் ஸ்திரமின்மையே ஏற்படும்.

-சஞ்சாரன்-

★

# தொங்கு நாடாளுமன்றம் ஒன்றை நோக்கி நகருகிறது இந்திய அரசியல்

## ராவ்வின் அமைச்சரவை மாற்றம் காங்கிரஸை காப்பாற்றமாட்டாது

உதயன் ஞாயிறு சிறப்பம்சம்


ஊனமுற்றோர் புனர்வாழ்வுச் சங்கம்

4 ஆவது வருடாந்த பொதுக் கூட்டம் - 1995

மேற்படி சங்க வருடாந்தப் பொதுக் கூட்டம் எதிர்வரும் மார்ச் மாதம் 4ம் திகதி சனிக்கிழமை (04 - 03 - 1995) பிற்பகல் 3 மணிக்குச் சங்கப் பணிமனையில் நடைபெறும்.

அங்கத்தவர்கள் யாவரும் தவறாது சமுகம் தருமாறு அன்புடன் வேண்டிக் கொள்கிறோம்.

— செயலாளர்

16, கொழும்புத்துறை வீதி,
சுண்டிக்குளி,
யாழ்ப்பாணம்.

[35140]



அறிவித்தல்

யாழ். வணிக ஊழியர் கழகத்தின் வருடாந்த பொதுக் கூட்டம் இம்மாதம் 25 ஆம் திகதி சனிக்கிழமை பி. ப. 3 மணிக்கு யாழ் கொட்டடி நமசிவாய வித்தியாலய மண்டபத்தில் நடைபெறவுள்ளது. ஆகவே கழக அங்கத்தவர்கள் தவறாது கலந்து கொள்ளவும். இக்கூட்டத்தில் நடப்பு வருட நிர்வாகிகள் தெரிவும் இடம்பெறும்.

சி. வைரவநாதன்,
பதில் செயலாளர்.

சி/ 374





நகர மெருகுக் கருவி

வீதி விதிகள் - கொங்கிறீட் வனத்தின் சட்டங்களான வீதி விதிகள் சகலருக்கும் சமமாகப் பிரயோகிக்கப்படுகின்ற போதிலும், தகுதியானதிற்குச் சமமாகவுள்ளது. எமது நேர்த்தியான பஜாஜ் சுப்பர் எப்-ஈ இதை வழங்குவதுடன் வீதியின் ஊடே நீங்கள் முன்னணியில் செல்லவும் வழிவகுக்கிறது.

போக்குவரத்து நிலைமைகளில் பிரதான வினையாற்றுனரான பஜாஜ் சுப்பர் எப்-ஈ. க்காகவே வீதி விதிகள் மேற்கொள்ளப்பட்டன.

மேலும் ஆகக் குறைந்த எரிபொருள் பாவனையுடனான உச்சமான கட்டுப்பாடான மற்றும் தன்மையும் கலந்துள்ளது.

- ஒரு லீட்டருக்கு 68 கி.மீ.
- தனித்த உருளை வளிகுளிரேற்றி, 2 அடிமுனை என்ஜின்.
- சக்திமிக்க 12 வோல்ற் ஒளிவீச்சு தலைமை விளக்கு.
- இடவசதியான இரட்டை ஆசனம், பொருள்சாமான வைப்பிடம்.
- உதவிச் சில்லு, கருவிப் பெட்டி, அணிமனிப்பை
- எரிபற்றல் செலுத்தறபூட்டு மீது, தனிசாவித தொழிற்பாடு.

டேவிட் பீரிஸ்

மோட்டார் கம்பெனி லிமிட்டெட்

69, ஹைட்பார்க் கோணர், கொழும்பு-2.
தொலைபேசி: 68 7169, 687174, பக்ஸ்: 687175

பஜாஜ் சுப்பர் எப்-ஈ

கடின வாகன நெரிசலின் இலகு வேலையை செய்வதற்கு உகந்தது.

கிளைகள்: மாத்தறை, கண்டி, கம்பஹா, குருநாகல், தெஹிவத்தகண்டிய, அம்பாறை. விநியோகஸ்தர்: ப.நோ. கூ.ச. சென். ஜோசப்ஸ் தொழில் நுட்ப பயிற்சி நிறுவனம், திருகோணமலை, டி.ஏ.ச. எஸ்.ச. மட்டக்களப்பு

(சி/513)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

டட்சன் சனி (Dutson Sunny) B211 11ஸ்ரீ 9000 தொடர் இலக்கம் வொக்ஸ் வகன் 9ஸ்ரீ இலக்கமுடைய இரண்டு, பெற்றோலில் ஓடிய நிலையில் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: நீ. ஆனந்தசிவம், புதுத்தோட்டம், நெல்லியடி, சரவெட்டி அல்லது சுப்பர் மார்க்கட், பஸ்நிலையம் நெல்லியடி [35133]

Broiler இறைச்சக் கோழிகள் தினமும் காலை 7-00 மணி தொடக்கம் சுத்தம் செய்து குறைந்த விலையில் பெற்றுக் கொள்ளலாம். மற்றும் அடை வைக்கக்கூடிய நல்லினக் கோழி முட்டைகள், பெரிய சாப்பாட்டு முட்டைகள், இதரை வாழைக் குட்டிகள் எப்பொழுதும் பெற்றுக் கொள்ளலாம். நல்லூர் வீடியோ சென்ரர். [35141]

மயில் குஞ்சு, Gold Fish விற்பனைக்கு உண்டு இல. 7, ஐயனார் கோயில் வீதி, வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம். [35145]

60 நாட்களை நிறைவுபெற்ற நல்ல இன அல்சேஷன் நாய்க்குட்டிகள் விற்பனைக்கு உண்டு தொடர்பு: அ. குகன், 15/2, ஓடை ஒழுங்கை, வண்ணார் பண்ணை. [35155]

### விற்பனையாகின்றன

1995ஆம் ஆண்டுக்கான திறமான வண்ண வண்ண படங்களுடன் கூடிய கலண்டர் படங்கள் மலிவான விலையில் பெற்றுக் கொள்ளலாம். (தொகையாகப் பெறுபவர்களுக்கு அச்சக பதிவுக் கூலி இலவசம்) ஸ்ரீலங்கா புத்தகசாலை, 234, காங்கேசன்துறைசாலை, யாழ்ப்பாணம் [சி-531]

எல்லாவித டயறிவகைகள் கொழும்பு விலையில் விற்பனையாகின்றன. வியாபாரிகளுக்கு விசேஷ கழிவு. பிற்மன், மோட்டார் புக் பிற்மன் டைப்பிரைட்டிங் புக் வியாபாரிகள் தமது விலாசம் அச்சடித்துக் கொடுப்பதற்குரிய கலண்டர் புதியவை. திருமண அழைப்பிதழ் கார்ட் அச்சிடுவதற்கு, பிறந்த நாள் வாழ்த்து மடல் மலிவு விலையில்; ஸ்ரீகாந்த் புத்தகசாலை யாழ்., மக்மிலன் புத்தகசாலை யாழ் [சி-358]

### MATHS - ENGLISH 95

ஆண்டு 6 இலிருந்து O/L வரை விசேடமாக உயர்ந்த பெறுபேறுடைய ஆரம்பத்திலிருந்து கற்பிக்கப்படும். கற்பித்தல் அனுபவமுள்ள ஆசிரியர் B.Sc. 85, மணல்தரை லேன், திருநெல்வேலி [35131]

### தேவை

தங்கியிருந்து கோழிகள், ஆடுகள் பராமரிப்பதற்கு ஓர் ஆள் தேவை குடும்பத்தோடு தங்கியிருக்க வசதியுண்டு நல்லூர் வீடியோ சென்ரர், 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். [35142]

பெண் காசாளரும், விற்பனையாளரும் உடன் தேவை. நல்ல சம்பளம் வழங்கப்படும். நேரில் வரவும் பாலாஜீ களஞ்சியம், இல. 61, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம். [வெலிங்டன் சந்திக்கு அருகில்] [35130]

வயது 27 வவுனியாவில ஆங்கில டிப்புளோமா படித்து முடித்த கத்தோலிக்க, அழகிய மணமகளுக்கு தகுந்த கத்தோலிக்க மணமகனை பெற்றோர் தேடுகின்றனர் முழுவிபரங்களுடன் தொடர்பு கொள்ளவும்: இல 759, மே/பா, உதயன், யாழ்ப்பாணம். [35150]

### செவ்வாய் வக்கிரம்

சமாதான முயற்சிகள் படிப்படியாக பரிணாம வளர்ச்சி அடையும் புத்தாண்டுப் பலன்கள் ரூ. 10/- எங்கும் விற்பனையாகின்றன. ஜெனன கால ஜாதகக் குறிப்புகள், கைரேகை, சாஸ்திரம், எண் சோதிடம் பார்வையிட நேரிலே சந்திக்கலாம். சத்யா (இடிகுண்டருகாமை) கட்டுடை. [7897]

### தவறிவிட்டது

8-2-95, 6/7 மணிக்கும் இடையில் உரும்பிராயிலிருந்து அராலிக்கு வரும் வழியில் குடை, மணிபேர்ஸ், கனடா கடிதங்கள் தவறிவிட்டன. கடிதங்கள் கொழும்பு விலாசமிடப்பட்டவை தயவுசெய்து கடிதங்களை கீழ் முகவரிக்கு அனுப்பி விடவும். திருமதி க. இராசதுரை செட்டியாமடம், வட்டுக்கோட்டை. (8235)

### மாறிய சைக்கிள்

4-1-95இல் காக்கைதீவு மீன் சந்தையில் எனது லுமாலா ஆண்கள் சைக்கிளுக்கு பதிலாக தவறுதலாக றொன்சன் சைக்கிளை எடுத்துச் சென்றுள்ளேன். எனது சைக்கிளை எடுத்தவர் தயவுசெய்து இல. 132/3, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம் விலாசத்தில் ஒப்படைத்து உங்கள் சைக்கிளைப் பெற்றுக் கொள்ளவும். [35154]

### பயிர் செழிக்க

விளைச்சலைப் பெருக்க பயிருக்கு ஊட்டம் தருவது சக்தி இயற்கைப் பசளை. கிலோ ரூ 12/-. பீடையை விரட்டவும், விளைச்சலைப் பெருக்கவும் "நீமியா" உரம் கிலோ 17/- பாவித்தோர் பயன்கண்டு மீளவும் பாவிக்கிறார்கள். மொத்தக் கொள்வனவுக்கு கழிவு உண்டு. "மிக்வைற்". [சி-537]

### ACCOUNTANCY

G. C. E. A/L 1980—1994 க. பொ. த. உயர்தரம் கணக்கியல் பரீட்சை வினாக்கள் தொகுப்பு: இ. செல்வநாயகம் B.Com. விற்பனையாகிறது பூபாலசிங்கம் புத்தக நிலையம், யாழ்ப்பாணம். [சி-365]

### மணமகன் தேவை

யாழ். இந்து பெற்றோர் அவுஸ்திரேலியாவில் பதிவிடம் பெற்ற 27 வயது நிரம்பிய செவ்வாய் தோஷமுள்ள Dip in-Accountancy முடித்த மகளுக்கு தகுந்த வரனைத் தேடுகின்றனர். முழு விவரங்களுடன் விண்ணப்பிக்கவும். இல 756, மே/பா உதயன், யாழ்ப்பாணம் (35054)

### வாடகைக்கு வீடு தேவை

சிறிய குடும்பம் ஒன்றிற்கு வீடு வாடகைக்குத் தேவை. முழுமையாகவோ, பகுதியாகவோ இருக்கலாம். மாநகர எல்லைக்குள் அல்லது கொக்குவில் – கோண்டாவிலில் விரும்பத்தக்கது தொடர்புகொள்ளவும்: வி. இல. 758, மே/பா உதயன், யாழ்ப்பாணம் (35112)

### ரி. வி. டெக திருத்துநர்

சகல றேடியோக்களையும், ரி. வி. டெக், எல்லாவித மணிக்கூடுகளையும் உத்தரவாதத்துடன் திருத்திக் கொள்ள டில்கா வாச் அன்ட் றேடியோ வேக்ஸ், 284, ஸ்ரான்லி வீதி [ஆரியகுளம் சந்தி], வானவில் அருகில் யாழ்ப்பாணம், கிளை கண்டி வீதி, சாவகச்சேரி. [சி-362]

## தாதி பயிற்சி நெறி
## DIPLOMA IN NURSING

**28 - 02 - 1995** இல் ஆரம்பமாகின்றது

1. கல்வித்தகைமை:- க. பொ. த. (சாதாரணம்)
2. விசட மருந்தியல் பயிற்சி உள்ளடக்கப்பட்டது.
3. 6 மாத கால பயிற்சி நெறி.
4. பிரபல வைத்தியசாலையில் செய்முறைப் பயிற்சி.
5. போராளிகள், மாவீரர் குடும்பத்தவர்க்கு இலவசக் கல்வி.

**சாயி மருத்துவக் கல்லூரி**

இல:- 10, பருத்தித்துறை வீதி,
(அரச தாதியர் பயிற்சிப் பாடசாலை முன்பாக)
யாழ்ப்பாணம்.

(சி/329)

## தாதிப் பயிற்சி நெறி
## NURSING

ஆரம்பம்:- 15 – 02 – 1995

★ சிறந்த தகுதிவாய்ந்த விரிவுரையாளர் குழு
★ இலவச ஆங்கில வகுப்புக்கள்
★ பரீட்சை முடிவில் தகுதி வாய்ந்த சான்றிதழ்களுடன் கூடிய ஒரு மாத கால இலவச செய்முறைப் பயிற்சி.

விபரங்களுக்கு :-

**NORTH CEYLON TECHNICAL INSTITUTE**
14 St. PETER'S LANE,
JAFFNA.

[சி/367]

## தேவை

பாவனைக்குகந்த ஆங்கில, தமிழ் தட்டச்சு இயந்திரங்கள் தேவை.

கடித மூலம் தொடர்பு கொள்ளவும்.

விண்ணப்ப முகவரி: சு. காசிவிசுவநாதர் (ஆசிரியர்)
மடம் ஒழுங்கை,
திருநெல்வேலிச் சந்தி,
யாழ்ப்பாணம். (35108)

## யாழ். வன்னி
## தொடர்புச் சேவை

யாழ்ப்பாணத்திற்கும் வன்னிப்பகுதிக்கும் செய்திகள் (தந்தி) பரிமாற்றம் செய்வதற்கு யாழ் ஆரியகுளம் சந்திக்கு அண்மையிலும், கிளிநொச்சி பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்கு அருகிலும் உள்ள கருமபீடங்களிலும், ஓமந்தை சோதனை நிலையத்திலுள்ள கருமபீடத்திலும செய்திகள் ஏற்கப்படுகின்றன.

1. சலுகைச் செய்திகள்:
   முதல் 15 சொற்களுக்கும் ரூபா 15/-வும் மேலதிக ஒவ்வொரு சொல்லுக்கும் ரூபா 2/- வும் அறவிடப்படும்.
2. வழமைச் செய்திகள்:
   முதல் 10 சொற்களுக்கு ரூபா 100/- வும் மேலதிக ஒவ்வொரு சொற்களுக்கும் ரூபா 5/- வும் அறவிடப்படும்.
3. வியாபாரச் செய்திகள்:
   முதல் 10 சொற்களுக்கு ரூபா 200/- வும் மேலதிக ஒவ்வொரு சொல்லுக்கும் ரூபா 15/- வும் அறவிடப்படும்.

(மேற்கூறப்பிட்ட 1, 2ற்குரிய பதில் பெறுவதற்கு ரூபா 100/-வும் 3ற்கு ரூபா 200/-வும் அறவிடப்படும்.)

அவசர கட்டணம் அறவிடப்படும் மேற்குறிப்பிட்ட செய்திகள் உடன் விநியோகிக்கப்படும்.

மேலதிக விவரங்களை அந்தந்த கருமபீடங்களில் பெற்றுக்கொள்ளலாம்

[35152]

## 1-ம் ஆண்டு நினைவஞ்சலி



**அமரர் பொன்னையா சிவகுரு**

தோற்றம்: 1928 04-12 மறைவு: 1994-01-24

திதி: 1995 — 02 — 12

அன்புமிகு இல்லத்தவராய்
ஆற்றல் மிகு அறங்காவலராய்
பாசமிகு தந்தையாய்
பாங்காய்ப் பேசிடும் பண்பாளராய்
ஓடோடிச் சென்று
உதவிவிடும் உள்ளத்தினராய்
உழைப்பால் உயர்ந்து – பலருக்கு
உயரவழி சொல்லிக் கொடுத்தவராய்
சகலரும நேசிக்கும் தங்க
மனிதனரான அன்பு தந்தையே!

எம்மை ஆறாத்துயரில் ஆழ்த்திவிட்டுவருடம் ஒன்று சென்றாலும், உங்கள் நினைவு என்றும் நீங்காது.

உங்கள் பிரிவால் வாடும்;
மனைவி, மக்கள், மருமக்கள்
பேரப்பிள்ளைகள்.

சாவகச்சேரி வடக்கு,
சாவகச்சேரி.

## தேவை

✶ எந்திரவியல் படவரைஞர்கள்
✶ கட்டடக்கலை படவரைஞர்கள்

தகுதிக்கேற்ப வேதனம் வழங்கப்படும்
விண்ணப்ப முடிவு திகதி **18 – 02 – 1995**

விண்ணப்ப முகவரி;-
சு. காசிவிசுவநாதர் [ஆசிரியர்]
மடம் ஒழுங்கை,
திருநெல்வேலிச் சந்தி,
யாழ்ப்பாணம்.

(35107)

# கேக் ஐசிங் கண்காட்சி

திருமதி R. செல்வராணி தேவராஜாவும் அவரது மாணவிகளாலும் நடத்தப்படும்.

காலம்; 1995 பெப்ரவரி மாதம் 11, 12, 13, 14 தினங்களில் மு.ப. 8-00 மணி முதல் பி.ப. 7-00 மணி வரை

✶ கலியாண கேக் வடிவமைப்புகள்
✶ பிறந்த நாள் கேக் வகைகள்
✶ மாச்சினி மலர் வகைகள்
✶ தையல் பூ வேலைப்பாடுகள்

இடம்:
**ஜெயா கேக் ஐசிங் சென்ரர்**
இல. 7, ஜெயமஹால் கற்குளி ஒழுங்கை,
சாவகச்சேரி.

ஆதரவாளரும், இவ்விளம்பரத்திற்கு உதவி அளிப்பவர்களும்

லீவர் பிறதர்ஸ் தயாரிப்புகளான
லிப்டன், லாவோஜி, சிலோன்ரா, டாசா தேயிலை வகைகள், றின்சோ
போன்றவற்றை
மொத்தமாகவும், சில்லறையாகவும்
விநியோகிக்கும், விநியோகஸ்தர்களான

**ஸ்ரீ விக்னேஸ்வரா களஞ்சியம்**
கண்டி வீதி, சாவகச்சேரி.

★ எமது நிறுவனத்திற்கு தேவையான ஐசிங் சுகர், பிளைவ் மாஜரின், ஐக்கோ, பட்டர், பேக்கிங் பவுடர் என்பவற்றை மொத்தமாகவும், மலிவான விலையிலும் விநியோகிப்பவர்கள் இவர்களே.

[8225]

## புலிகளின் குரல் வானொலியில்

**12 — 02 — 1995**
**ஞாயிறு இரவு**

★ 8-01 — இசையரங்கம் — செல்வி ச. கௌரியின் வீணைக் கச்சேரி
★ 8-30 — செய்திகள்
★ 8-40 — தாயகப் பாடல்கள்
★ 9-00 — மணிக்கு இரவு நிகழ்ச்சிகள் நிறைவு பெறும்.

**13 — 02 — 1995**
**திங்கள் காலை**

★ 7-02 — மாவீர வணக்கம்
★ 7-15 — நீங்கள் கேட்டவை
★ 7-30 — செய்திகள்
★ 7-35 — பத்திரிகைச் செய்திகள்
★ 7-40 — நீங்கள் கேட்டவை நிகழ்ச்சியின் தொடர்ச்சி
★ 8-00— மணிக்கு காலை நிகழ்ச்சிகள் நிறைவு பெறும்.

## தமிழீழ வானொலி ஒலிபரப்பு

**ஞாயிறு மாலை**

★ 5-01 — சிந்தனைச் சிதறல்
★ 5-02 — எழுச்சிக் கீதம்
★ 5-10 — புதியவை
★ 5-15 — மழலைகளுக்காக
★ 5-30 — கதம்பம்
★ 6-00 சிந்தனைக்குச் சில வினாடிகள்
★ 6-02 — உங்கள் தெரிவு

## 15-ம் திகதி முதல் தபால் கட்டண உயர்வு அமுல்

வரவு - செலவுத் திட்டத்தின் அறிவிக்கப்பட்ட தபால் கட்டண உயர்வு எதிர்வரும் 15 ஆம் திகதி முதல் அமுலுக்கு வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

சாதாரண தபால் கட்டணம் 25 சத வீதம் உயர்த்தப்பட்டுள்ளது. (ஒ-3)

# முத்திப்பேறு பெற்ற
# யோசவாஸ்
# நன்றி வழிபாடு

காலம்: 23 – 2 – 1995 வியாழன், மாலை 4-30 மணி

இடம்: கொழும்புத்துறை – புனித சவேரியார் குருத்துவக் கல்லூரி

கொழும்பில் திருத்தந்தை II ஆம் அருள் - சின்னப்பரால் முத்திப்பேறு பெற்றவர் எனப் பிரகடனப்படுத்தப்பட்ட யோசவாஸ் யாழ். வந்து இறங்கிய இடமாகிய கொழும்புத்துறையில் நன்றி வழிபாடு.

யாழ். மறைமாவட்ட அனைத்து ஆலய திருச்சபைகளும் அணி திரண்டு வருக.

## நிகழ்ச்சி நிரல்

மாலை 4-30 மணி
ஆயர் தலைமையில் கூட்டுத்திருப்பலி

மாலை 5-45 மணி
சிறப்பு நிகழ்வுகள்

மாலை 6-30 மணி
"யோசவாஸ்" நாட்டுக்கூத்து
(மெருகூட்டப்பட்ட ஆட்டக்கூத்து)

யோசவாஸ் செயலகம்
ஆயர் இல்லம்
யாழ்ப்பாணம்.

விளம்பர அன்பளிப்பு
**யாழ்ப்பாணம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்**

[35161]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உதயன்**
202/2 காவலர் வீதி
யாழ்ப்பாணம்

## சுகவாழ்வு

அண்மையில் ஏற்பட்ட பருவகால மாற்றங்களால் மலேரியா நோய் பரவும் ஆபத்து இருப்பதாக சுகாதார வட்டாரங்கள் அறிவித்துள்ளன. தடுப்பு நடவடிக்கைகளைத் தீவிரப்படுத்தாவிடில், மூளைக் காய்ச்சல் போன்ற ஆபத்தான நோய்கள் குடாநாட்டில் பரவக் கூடும் என்றும் எச்சரிக்கப் பட்டுள்ளது.

மலேரியாநோய்க்குக்காரணியாக இருப்பது நுளம்பு. பருவகாலம் சீராக இருந்த வேளைகளில் மழை காலம் முடிவுறுவதுடன் நுளம்புத் தொல்லையும் அனேகமாக நீங்கிவிடும். நுளம்பினால் உண்டாகும் நோய்களின் தாக்கமும் குறையும்.

ஆனால் இப்போதெல்லாம் பருவ காலம் ஓர் ஒழுங்கு சீர்முறையில் இல்லை. மனிதன் தன்னைத் திண்டத் தொடங்கியதால் இயற்கையும் மாறி வருகிறது. மழை பருவம் மாறிப் பெய்வதால் வருடத்தில் பல மாதங்களுக்கு நுளம்புத் தொல்லை தொடர்கிறது. மழையினால் மட்டுமன்றி சுற்றாடல் சுகாதாரம் சரிவரப் பேணப்படாமையாலும் நுளம்பு பெருகுவதுண்டு.

எனவே நுளம்பினால் பரவும் நோய்களைத் தடுப்பதற்கு, சுற்றாடல் சுகாதாரத்தைப் பேணுவது இன்றியமையாததாகிறது. போர்த் தாக்கங்களினாலும், மக்கள் இடம்பெயர்வு, வைத்திய, சுகாதார சேவைகள் சீர்கெட்டமை போன்றவற்றினாலும் சுற்றாடல் சுகாதாரத்தை உரிய வழியில் பேணுவதும் சிரமமாக மாறியுள்ளது.

நுளம்பினால் உண்டாகும் நோய்கள் மட்டுமன்றி தமிழ்ப் பகுதிகளில் மக்களின் உடல்நலம் பாதிக்கப்பட்டு அவர்கள் நோயாளிகளாவதற்கு இயற்கை மட்டுமன்றி அரசாங்கமும் காரணமாகும்.

நுளம்புப் பெருக்கத்தைத் தடுத்து மலேரியா மற்றும் நோய்கள் பரவாது பாதுகாத்துக் கொள்வதற்கு மலத்தியோன் போன்ற மருந்துவகைகளைத் தெளிக்கும் ஏற்பாடுகளைச் சரிவரச் செய்ய முடியாமல் அரசாங்கத்தின் பொருளாதாரத்தடை இதுவரை தடுத்தது.

அதுபோலவே உணவு வகைகள், மருந்து வகைகள் வேண்டிய அளவில் கிடைக்காததால் நோயாளிகளாகும் மக்களின் எண்ணிக்கை அதிகரித்தது.

எனினும் கிடைக்கும் குறைந்தளவு வசதிகளைத் தக்கபடி பயன்படுத்தியேனும் நோயாளர்களாகும் மக்களின் எண்ணிக்கை அதிகரிக்காமல் பார்த்துக் கொள்வதே கெட்டித்தனம். இது விடயத்தில் மக்கள் கூடுதல் அக்கறை செலுத்துவதே அதற்கு ஒரே மார்க்கமாகும்.

கடந்த வருடம் டிசம்பர் மாதத்தில் மட்டும் யாழ்ப்பாணக் குடாநாட்டில் 5,457 பேர் மலேரியாவினால் பீடிக்கப்பட்டுச் சிகிச்சை பெற்றார்கள் என்ற புள்ளிவிவரம் நுளம்புத் தொல்லை, அதன் பெருக்கம் எந்தளவுக்கு அதிகரித்திருக்கிறது என்பதற்கு ஓர் அத்தாட்சியாகும்.

வீடுகளில் உள்ள கிணற்றடிகள் மற்றும் வடிகால்களில் நீர் தேங்காமல் அகற்றல். குப்பை கூழங்களை உரிய முறையில் அகற்றுதல், மக்கள் நெருக்கமாக வாழும் பகுதிகளில் பன்றிகள் வளர்ப்பதை தவிர்த்தல், வீடுகளில் கால்நடைகள் வளர்க்கப்படும் தொழுவங்களைத் துப்புரவாக வைத்திருத்தல், மரங்கள் அடர்ந்து வளராமல் வெட்டி விடுதல் போன்றவற்றை தவறாது அக்கறையுடன் செய்ய வேண்டும்.

நோயற்ற வாழ்வே மனிதனுக்குக் குறைவற்ற செல்வம். அதற்கு ஆளாகாமல் — நோயாளிகளாகாமல் — தடுத்துக் கொள்வது மனிதனின் பொறுப்பே. இயற்கையால் உண்டாகக் கூடிய பாதிப்புகளை எதிர்கொள்ளக்கூடிய வல்லமையை வருமுன் காப்பதன் மூலமே வளர்க்கலாம்.

நோய்கள் பற்றிய அறிவும், தடுப்பு நடவடிக்கைகள் பற்றிய அறிவும் எல்லோருக்கும் அவசியம். அந்த அறிவை அன்றாட வாழ்க்கையில் செயலாக்க வேண்டும். அதுவே சுகவாழ்வுக்கு உறுதுணையான வழி.

# வாக்குறுதிகளை சந்திரிகா நிறைவேற்றாவிடின் மக்கள் வேறுவழிகளை நாடுவார்கள்!

*''ராவய'' ஆசிரியர் விக்டர் ஐவன் 1994 டிசம்பர் மாத 'கவுன்டர் பொயின்ற்' ஆங்கில சஞ்சிகையில் எழுதிய கட்டுரையின் தமிழாக்கத்தை இங்கே தருகின்றோம்.*

## நாட்டின் இன்றைய அவசர தேவை என்ன? அமைப்புரீதியான மக்கள் இயக்கமே

தன்னுடைய அடிவருடிகள் சிலருடன் சேர்ந்து ஜே. ஆர். ஜெயவர்த்தனா அறிமுகம் செய்து ஸ்தாபித்த முதலாளித்துவ அமைப்பே அசிங்க அம்சங்களில் மிகவும் அசிங்கமானது என்று நான் கருதுகின்றேன்.

நச்சுப் பாம்புகள் போன்ற ஒரு கோஷ்டியை அது ஊட்டி வளர்த்துள்ளது.

இவர்களை ஜெயவர்த்தனா அரவணைத்து தேசத்தின் ஜீவ இரத்தத்தை உறிஞ்ச அனுமதித்தார். இந்தப் பாம்புகளுக்கு நாட்டைப் பற்றிய அபிமானம் எதுவும் கிடையாது. இவர்கள் தாம்விரும்பியவர்களிடமிருந்து விரும்பியவாறுஇயன்றளவு இரத்தத்தை உறிஞ்சுவார்கள். ஜெயவர்த்தனா இவர்களுக்கு இந்த சலுகையை வழங்கினார்.

பழைய அடிவருடிகளுடன் சேர்ந்து முதலாளித்துவத்தை அறிமுகம் செய்தவர் இப்பொழுது இந்த நாட்டின் ஆட்சியாளராக இல்லை. அவர் தற்பொழுது பொது மக்கள் பணத்தில் ஓய்வு பெற்று வாழும் ஒருமுன்னாள் ஜனாதிபதியாகவே இருக்கிறார்- இந்தக் மிடுக்கான— கொடுங்கோன்மையான— ஆட்சியாளர் தற்பொழுது ''அறளை'' பெயர்ந்த கட்டத்தில் இருக்கின்றார். கடந்த காலத்தில் தாம் இழைத்த இழி செயல்கள், கொடுமைகள் ஆகியன பற்றிக் கூட ஒழுங்காக யோசிக்க முடியாதவராக அவர் பலவீனமாக இருக்கின்றார்.

### நச்சு அமைப்பு உயிர்வாழ்கிறது

இந்த அமைப்பை அறிமுகம் செய்ய அவருக்கு உதவிய பிரதானிகளில் எவரும் இப்பொழுது உயிருடன் இல்லை.

பிரதான தலைவர்கள் இறந்த போதும் அவர் உருவாக்கிய நச்சுத்தனமான அமைப்பு உயிர்வாழ்கின்றது. அவர் மட்டும் இவற்றை எல்லாம் பார்த்துக்கொண்டு வாழ்கின்றார்.

நீதியை உத்தரவாதம் செய்ய சட்டம் தவறும்போது விதி அதைச் செய்கின்றது என நான் கருதுகின்றேன்.

அவர் உருவாக்கிய ஊழல் தனமான அமைப்பின் வீழ்ச்சியைக் தன்கண்ணால் காணக்கூடியளவிற்கு திரு. ஜெயவர்த்தனா உயிருடன் வாழவேண்டும் என்று அப்பாவித்தனமான ஆசை எனக்கு முன்னர் இருந்தது.

கடந்த நாடாளுமன்றத் தேர்தல்களில் ஐக்கிய தேசியக்கட்சி அரசாங்கம் தோல்வியை நோக்கிச் சென்று கொண்டிருந்தபோது எனது ஆசை நிறைவேறுவதாக நான் மகிழ்ச்சி அடைந்தேன் என்பதைக் கூற வேண்டும்.

ஏற்படவிருந்த அரசாங்க மாற்றம், அகம்பாவமான வயோதிபத் தலைவரின் மனதிலும் கவலைகளை ஏற்படுத்தியிருக்கலாம்.

புதிதாக எழுந்து கொண்டிருந்த புதிய அரசுத் தலைவரை அவர் விரும்பியே இருக்க முடியாது. அந்தப் புதிய தலைவரின் தாயார் சிறிமாவோ பண்டாரநாயக்காவுக்கும் கணவர் விஜயகுமாரதுங்கவுக்கும் தாம் மேற்கொண்ட நச்சு நடவடிக்கைகளை அவர் முற்றாக மறந்திருக்க முடியாது. மிகவும் சாதாரணமானவை என்று கருதக்கூடிய குற்றங்களுக்காக இவர்களுக்குக் கொடிய தண்டனையை ஜே. ஆர். வழங்கினார்.

ஆனால் ஜே. ஆரோ இவற்றிலும் பார்க்கக் கடுமையான குற்றங்களை இழைத்தவர். இத்தகைய ஜே. ஆர். அதிகாரத்துக்கு வரும் புதிய தலைவர் தனக்கு இரக்கம் காட்டுவார் என்று எதிர்பார்த்திருக்க முடியாது.

### உண்மை அரசியல் புயல் அல்ல

ஆனால் தான் பயந்தது போன்று அது உண்மையான அரசியல் புயல் அல்ல; சலசலப்பான மென்காற்றே ஆகும் என்று அவர் இப்பொழுது கருதக்கூடும்.

அவருடைய ஆதரவாளர்கள் தேர்தலில் தோற்கடிக்கப்பட்டது இன்னொரு விஷயம். ஆனால், பெரும் மாற்றங்களை ஏற்படுத்தும் என்று அவர் அஞ்சிய அந்த அரசியல் புயல் தான் உருவாக்கிய நச்சுத்தனமான அமைப்புக்கு சிறிய தீங்கைக்கூட விளைக்கவில்லை என்பதை அவர் கண்டபோது 'வணங்கப்படும்' வயோதிபத் தலைவர் புத்திளமை பெற்றிருப்பார் என்பதில் சந்தேகம் இல்லை.

தான் வெறுத்த கட்சி, தன்னை வெறுப்பதற்குப் பதிலாக நேசிக்கத் தொடங்கியதையும், தன்னுடைய அடிவருடிகளும் தான் வளர்த்த நச்சுப் பாம்புகளும் புதிய ஆட்சியாளர்களினது பெருவிருப்பத்துக்கு உரியவர்கள் ஆகுவதையும் கண்டபோது ஜே. ஆர். எவ்வாறு மகிழ்ச்சி அடைந்திருப்பார் என்பதைக் கற்பனை செய்வது கடினமல்ல.

### ஜனாதிபதிகளின் அரவணைப்பு

ஜே. ஆர். ஜெயவர்த்தனா, ஆர். பிரேமதாச, டி. பி. விஜயதுங்க ஆகிய ஜனாதிபதிகளின் விசேட அரவணைப்பில் தோன்றிக் கொழுத்த இந்த அடிவருடிகள் கூட்டம் எமக்கு மிகவும் ஆபத்தான அரவங்களாகத் தோன்றலாம்.

ஆனால் முன்னாள் மூன்று ஜனாதிபதிகளும் அவர்களைத் தமது அன்புக்குரிய பிள்ளைகளாகக் கொண்டனர்; அவர்களைப் பேணிப் பாதுகாப்பது தமது கடமை எனக் கருதினார்கள்.

இந்த ஆட்சியாளர்கள் நாட்டைத் தமது தனிப்பட்ட சொத்தாகக் கருதினார்கள். மேற்குறிப்பிட்ட தமது செல்லப்பிள்ளைகளை விரும்பியவாறு நாட்டின் ஜீவ இரத்தத்தைச் சுரண்ட அனுமதித்தார்கள். எம்மைப் போன்ற சாதாரண மக்கள் சட்டங்கள் விதிகளால் கட்டுப்பட்டிருந்தோம். இவர்கள் அவ்வாறு கட்டுப்படவில்லை.

தம்மிஷ்டப்படி நாட்டைச் சூறையாட மட்டும் அல்ல, நாட்டின் பிரஜைகளைப் படுகொலை செய்யவும் அவர்கள் அனுமதிக்கப்பட்டார்கள்.

### பரிவர்த்தனைகள் பூரண கட்டுப்பாடு

இந்த விசேட கூட்டத்தினர் நாட்டில் நடைபெற்ற முக்கிய செயற்பாடுகள் அனைத்தையும் கட்டுப்படுத்தினார்கள். இந்த நாடு எதை வாங்க வேண்டும், எதை விற்க வேண்டும் என்ன வேலைத் திட்டங்களை அமைக்க வேண்டும் என்பனவற்றை எல்லாம் இவர்கள் தான் இறுதியாகத் தீர்மானித்தார்கள். அரசு வங்கிகள் இவர்களுக்கு எல்லையற்ற கடன் வசதிகளைக் கொடுக்க வேண்டியிருந்தது. கடன்களைப் பெறுமபோது சொத்துப் பிணைகளை அவர்கள் வழங்க வேண்டியது இல்லை; வழக்கமாகச் செய்வது போல் கடன்களைப் பெறுவதற்கு அவர்கள் தகுதியானவர்கள் தானா என்பது கூடப் பார்க்கப்பட வில்லை.

அவர்களுக்குக் கடன்களைப் பெற மட்டும் அல்ல, விரும்பினால் கடன்களைத் திருப்பிச் செலுத்தாமல் விடவும் உரிமை இருந்தது.

அரசு முயற்சிகள் தனியார் துறைக்கு விற்கப்பட்டபோது, இவர்கள் புதிய சொத்துரிமையாளர் ஆகினார்கள்; அல்லது இடைத் தரகர்களாகச் செயற்பட்டார்கள். இவ்வாறு தாம் ஏற்கனவே பெற்றுக் கொண்ட பொருளாதார ஆதிக்கத்தை மேலும் வலுப்படுத்தினார்கள். விற்கப்பட்ட அரசு நிறுவனங்களை யார் வாங்குவது என்பதை இவர்கள்தான் அநேகமாகத் தீர்மானித்தார்கள். தாம் வாங்க விரும்பிய நிறுவனங்களைத் தாம் விரும்பிய விலையில் இவர்கள் வாங்கினார்கள். அநேகமாக இவர்கள் இதற்குத் தமது பணத்தைக் கொடுக்கவில்லை, வங்கி ட்ராப்டுகளையே கொடுத்தனர்.

### கவனமான கொள்கை

குற்றவிசாரணைப் பிரேரணை, பிரேமதாச படுகொலை, மாகாண சபைத் தேர்தல்கள், தென் மாகாண சபைத் தேர்தலில் ஐ. தே. கவுக்கு ஏற்பட்ட படுதோல்வி முதலியவற்றைக்கண்டு நாடு ஒரு அரசியல் மாற்றத்தை நோக்கிச் சென்று கொண்டிருக்கிறது என்பதை இவர்கள் புரிந்து கொண்டார்கள் போலும். தமக்கு என்ன காத்திருக்கிறது என்பது பற்றி இவர்கள் கவலைப்படத் தொடங்கினார்கள். ஆகவே இவர்கள் அதிகாரத்துக்கு அடுத்ததாக வர விருப்பவர்களைப் பொறுத்து கவனமாக நடக்கும் கொள்கை ஒன்றைக் கடைப் பிடித்தார்கள்.

நாடாளுமன்ற, ஜனாதிபதித் தேர்தல் வேலைகளுக்காக பொதுமக்கள் ஐக்கிய முன்னணிக்குப் பணம் தேவையாக இருந்தது. இறுதியில் கூட்டணியின் தேவைக்குக் கூடுதலான பணத்தை வழங்கி நச்சுப் பாம்புகள் கூட்டணியின் நெருங்கிய நண்பர்கள் ஆகினார்கள்.

இந்த நச்சுப் பாம்புகளை வெளியேற்ற வேண்டும் என்று மக்களுக்கு முன்னால் பொதுமக்கள் ஐக்கிய முன்னணி பல வாக்குறுதிகளை அளித்தது இன்னொரு விவகாரம்.

ஆனால் பாரதூரமான மாற்றம் ஒன்றைச் செய்வதற்குத் தேவையான— அவசியமான— மாற்றீடான — அரசியல் கலாசாரம் ஒன்றை அமைப்பதற்கு பயிற்சி பெற்ற குழுவாக பொதுமக்கள் ஐக்கிய முன்னணி அமையவில்லை.

### நச்சுப்பாம்புகளின் பிடி இறுகியது

ஆகவே இந்த நச்சுப் பாம்புகளின் பிடியில் சிக்குவதால் ஏற்படும் ஆபத்துகளை பொதுமக்கள் ஐக்கிய முன்னணியினர் சிலவேளை யதார்த்தரீதியாக புரிந்து கொண்டிருக்கலாம். ஆனால் அவர்கள் எவ்வளவுக்குப் பணத்துக்கு ஆசைப்பட்டார்களோ அவ்வளவுக்கு நச்சுப் பாம்புகளின் பிடி இறுகியது. நச்சுப் பாம்புகள் புதிய ஆட்சியாளர்களினதும் செல்லப் பிள்ளைகள் ஆகினார்கள்.

தற்பொழுதைய நிலைமை இப்படிப்பட்டது என்றால் மகாராஜாக்களும் பாஸ்கரலிங்கங்களும் ஜெயக்கொடிகளும் ஏயர் பஸ் பேரம் மூலம் முறைகேடாகப் பெற்ற கோடிக்கணக்கான ரூபாக்களை திறைசேரி மீளப் பெற முடியும் என்று எதிர்பார்க்க முடியாது; அரசாங்கத்தால் 8 கோடி ரூபா செலவில் விருத்தி செய்யப்பட்டு, ஏக்கர் 121 ரூபாவுக்கு மகாராஜாக் கொம்பெனிக்கு குத்தகைக்கு விடப்பட்ட — 3114 ஏக்கர் விஸ்தீரணம் உடைய — இரண்டு மிகவும் செழிப்பான தேயிலைத் தோட்டங்களை அரசாங்கம் மீண்டும் பெறமுடியும் என்று நினைக்க முடியாது; குற்றவிசாரணைப் பிரேரணை தோற்கடிக்கப்பட்ட போது 'கொன்ரெய்னர்' வளாவு ஒன்று சம்பந்தமாகப் பாதை ஒன்றை அமைக்க நவலோக கொம்பெனிக்கு முறைகேடாக வழங்கப்பட்ட 95 கோடி ரூபாவையோ அது போன்ற பரிமாற்றங்களால் ஏற்பட்ட இழப்புகளையோ திறைசேரி மீட்டுப் பெறுவது அசாத்தியம்; கிறேலைன் கொம்பெனிக்கு தினமும் வழங்கப்பட்டுவரும் ஒரு லட்சம் ரூபா திறையை நிறுத்துவது அசாத்தியம்; முறைகேடான ரீதியில் அபகரிக்கப்பட்ட அரசு முயற்சிகளைப் பொறுத்து திறைசேரிக்கு வர வேண்டிய மேலதிக நிதிகளை மீட்பது அசாத்தியம்; இந்தக் கூட்டத்தினரால் அரசு வங்கிகளிடமிருந்து பெறப்பட்டு கொடுபடாமல் இருக்கும் சுமார் 3கோடி ரூபாக்களை மீட்பது அசாத்தியம்.

### நடவடிக்கைக்குத் தயாரில்லை

உறுதியற்ற தலைவர் என்று கருதப்படும் முன்னாள் பிலிப்பீன்ஸ் ஜனாதிபதி அக்கினோ கூட மார்க்கோஸ் கும்பல் நாட்டைச் சூறையாடியதற்கு எதிராக தீர்க்கமான நடவடிக்கை எடுத்தார். நாட்டுக்குரிய செல்வத்தை மீட்டுப் பெற அவர் சர்வதேச நீதிமன்றத்திற்குக் கூடச் சென்றார். ஆனால் எமது அரசாங்கம் மக்களுக்கு வாக்குறுதிகள், பண்டாரநாயக்கா சமாதிக்கு முன்னால் சத்தியம் ஆகியவற்றைச் செய்த போதும் அக்கினோ அளவு கூடச் செல்லத் தயாராக இல்லை.

1994 டிசம்பர் 15 ஆம் திகதிக்கு முன் இழைக்கப்பட்ட எந்தக் குற்றத்தையும் பொறுத்து பாரதூரமான நடவடிக்கை எடுக்க அரசாங்கம் தயாராக இல்லை என்பது ஊழல் – எதிர்ப்புச் சட்டங்களுக்கு வகுக்கப்பட்ட வரையறைகளிலிருந்து தெளிவாகத் தெரிகிறது.

இந்தக்கூட்டத்தினர் தேசத்தின் செல்வத்தையே முறை கேடாகப் பயன்படுத்தினார்கள். இவர்கள் நிதிகளை முறைகேடாகப் பயன்படுத்தினார்கள் என்பதை அரசாங்கமும் ஏற்றுக் கொள்கிறது. இவற்றில் சம்பந்தப்பட்ட நபர்களையும் அரசாங்கத்துக்குத் தெரியும்.

ஆனால்இந்தப் பணங்களை மீட்பதற்கோ அல்லது நஷ்டம் கோருவதற்கோ வழியில்லை என்று அரசாங்கம் கூறுகின்றது.

இத்தகைய பெரும் தவறுகளைத் திருத்த அரசாங்கத்துக்கு வழி இல்லை என்றால் அத்தகைய அரசாங்கத்தை வீரியமற்ற பலவீனமான அரசாங்கம் என்று தான் கூற வேண்டும்; மக்களின் நலனுக்காகப் பாடுபடும் அரசாங்கம் என்று கூறமுடியாது.

வாக்குகளால் தோற்கடிக்க முடியாத ஒரு சக்தி தேன் பூசிய குண்டுகளுக்கு முன் தோல்வி அடைந்துள்ளது என்று நான் கருதுகின்றேன். இப்பொழுது நாங்கள் என்ன செய்வது?

அடிவருடி முதலாளித்துவத்தை பூமற்றதாக்க வேண்டும். இன்றைப் பிரதிநிதித்துவம் செய்த ஆட்சியின் மீது மக்கள் கொண்ட எரிச்சலால் அல்ல, நாட்டின் முன்னேற்றத்துக்கு அது தடையாக இருப்பதால் அதை வீழ்த்த வேண்டும்.

நாட்டின் முன்னேற்றத்துக்கு அத்தியாவசியமான இந்த நிபந்தனையை பொது மக்கள் ஐக்கிய முன்னணி அரசாங்கம் நிறைவேற்றாவிட்டால், இதற்காக மக்கள் வேறு சில வழிகளைத் தேடுவார்கள்.

ஜே. ஆர். ஜெயவர்த்தனாவின் ஊழல் மலிந்த நாட்டுக்குப் பதிலாக புதியதோர் நாட்டை அமைக்கும் பணியை மக்கள் சந்திரிகா குமாரதுங்கவிடம் ஒப்படைத்தார்கள். இந்தக் கடமையையும் கடப்பாட்டையும் அவர் நிறைவேற்றாவிட்டால் புதியதோர் நாட்டை அமைக்கும் தமது நோக்கத்தை மக்கள் முற்றிலும் கைவிடமாட்டார்கள் எனலாம்.

இந்தச் சோக நிலைமைக்கு பொறுப்பான ஐக்கிய தேசியக் கட்சியை மீண்டும் அதிகாரத்துக்குக் கொண்டுவருவது இப்பிரச்சினைகளுக்கு தீர்வாகாது என்பது திண்ணம். நாட்டை இரத்த ஆற்றில் மூழ்கடித்த ஜே. வி. பி. போன்ற தீவிரவாதக் கட்சியும் இதற்குப் பரிகாரம் ஆகாது.

தனி நபர்களில் நம்பிக்கை வைக்காமல், அதிகாரத்துக்கு வரும் அரசின் எந்தப் பாரதூரமான நடவடிக்கைக்கும் ஆதரவு அளித்து, அரசாங்கம் செய்யும் தவறுகளைத் தோற்கடிக்கச் செயற்படும் அமைப்பு ரீதியான மக்கள் (சிவில்) இயக்கம் ஒன்றினால் தான் இந்த அரசியல்வாதிகளின் பைத்தியக்காரத் தனத்தால் நாட்டுக்கு ஏற்படும் தீங்கைக் குறைக்க முடியும்.

இத்தகைய, மக்களின் அமைப்பு ரீதியான இயக்கம் ஒன்றுக்கான காலம் வந்து விட்டது என நான் கருதுகின்றேன். ★

# மனிதன் முதலில் பறந்தது பலூனில் அதன் வளர்ச்சியே விமானமாகவந்தது

அமெரிக்கர் எத்துறையில் ஈடுபட்டாலும் பெரிது பெரிதாய் செய்வதில் ஆர்வமுடையவர்கள். ஆர்வம் இருந்தாலும் அதை நடைமுறைப் படுத்த போதிய பணம் இவர்களிடம் உண்டு. இவர்களுடைய மூளை பிரித்தானியருக்கும் உண்டு. ஆனால் இவர்களைப்போல் பணவசதி அவர்களிடம் இல்லை

முதலாவதாக பலூன்கள், ''எயர் ஷிப்களை'' எடுப்போம். (Balloons and Airships) 1783 ஆம் ஆண்டில், முதன் முதலில் பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த மொன்ட் கோல்பியர் சகோதரர்கள் 30 அடி விட்டமுடைய சூடான காற்று பலூனை 6 000 அடி உயரத்திற்கு அனுப்பினார்கள். இதன் பின் மனிதன் பலூன் மூலம் மேலெழுந்தான். அதனை அடுத்து பான் (Fan) பொருத்தி பக்கவாட்டிற்கு அசையத் தொடங்கினான். இதனை யடுத்து ''எயர்ஷிப்''கள் உருவாகின.

இவை நீள வடிவ குழாய் போன்ற அமைப்புடையவை. அதில் சிறிய செட்டைகள் பொருத்தப்பட்டிருக்கும். பக்கப்பாட்டு அசைவிற்கு மின் இயந்திரத்தினால் பான் (Fan) சுழற்றப்படுகிறது.

''எயர் ஷிப்''புகள் இரண்டாம் உலக யுத்தம் வரைக்கும் நடைமுறையில் இருந்தன. இத்தொடரில் அமெரிக்கர்கள் இராட்சத எயர் ஷிப்களை செய்தார்கள். இதில் பெரியது 1½ மில்லியன் கன அடி கனவளவு கொண்டது. இதில் ஹீலியம் வாயு நிரப்பப்பட்டிருந்தது.

### கிளைடர்கள்

எயர் ஷிப்புகளுக்கும், இயந்திரம் பொருத்திய விமானங்களுக்கும் இடையில் கிளைடர்கள் நடைமுறையில் இருந்தன (Gliders). இவைகள் விமானங்களைப் போன்ற அமைப்புடையன. ஆனால் பியூசிலேச் (Fuselage) ஒடுக்கமானது — செட்டை நீளம் கூடியது. 1852—53 இல் மனிதன் திருப்திகரமாய் கிளைடர் மூலம் பறந்தான்.

அடுத்ததாக ''பிஸ்ரன்'' இயந்திர பான் (Fan) தள்ளுவிசை விமானங்களை பார்ப்போம். 1903இல், அமெரிக்காவில் றைட் சகோதரர்கள் இயந்திரம் பொருத்திய விமானத்தில் முதன் முதலில் பறந்தார்கள் [illegible] பெயர் [illegible]. இதன் [illegible] 12 குதிரைச் சக்தியுடைய 4 சிலிண்டர் இயந்திரம். இயந்திரத்தின் நிறை 180 இறாத்தல். விமானத்தின் மொத்த நிறை 750 இறாத்தல். செட்டை நீளம் 40 அடி. விமான நீளம் 21 அடி. இரட்டைச்செட்டை விமானம். இது 12 செக்கனில் 120 அடிதூரம் பறந்தது.

இதன் பின் அமெரிக்கர்கள் இத்தகைய விமானங்கள் பெரிதாக செய்யத் தொடங்கினார்கள். முதலாம் உலக யுத்தத்தின் போது 400 குதிரை சக்தியுடைய 'லிபெட்டி' இயந்திரங்களே தாராதாரமாய் இருந்தன. பின்னர் இது மேலும் வளர்ச்சியடைந்து. இரண்டாம் உலக [illegible] பி. 29 சுப்பர் போட்றெஸ்' ஒன்று [illegible] இயந்திரங்கள் பொருத்தப்பட்டன. ஒவ்வொன்றும் 2,200 குதிரைச் சக்தி உடையவை. இந்த விமானங்களில் ஒன்றுக்கு ''எனொலா கேய்.' (Enolagay) என்று பெயரிடப்பட்டு அதுவே 1945 ஓகஸ்ட் 6இல் ஹிரோஷிமாவிலும். 1945 ஒகஸ்ட் 9இல் நாகசாகியிலும் அணுகுண்டுகளை வீசுவதற்கு பயன்படுத்தப்பட்டது.

### 4 இயந்திரங்கள் பொருத்தப்பட்ட விமானங்கள்

மேலும் இத்துறை வளர்ச்சியடைந்து ''போயிங் பி. 50 சுப்பர் போட் றெஸ்'' என்ற விமானத்தில் 4 இயந்திரங்கள் பொருத்தப்பட்டன. ஒவ்வொன்றினதும் வலு 3,500 குதிரைச் சக்திஆகும். இதற்கு 28 சிலிண்டர்கள் உண்டு. இதுவே உலகில் பெரிய விமான பிஸ்ரன் இயந்திரமாகும்.

### ஜேர்மனியரே இரண்டாம் உலகப் போரில் 'ஜெட்' விமானத்தை பயன்படுத்தினர்

உலகில்முதன் முதலில் ஜெர்மனியரே ஜெட் விமானத்தை 1939-ம் ஆண்டு,இரண்டாவது உலக யுத்தத்தின் போது பறக்க விட்டனர். முதன் முதலில் 1952 மே மாதம் 2ஆம் திகதி இங்கிலாந்து. தனது ''கொமெட் ஜெற்'' விமானத்தை போக்கு வரத்துச் சேவையில் ஈடுபடுத்தியது அமெரிக்காவின் முதலாவது ஜெற் போக்குவரத்து விமானம் ''போயிங் 707'' ஆகும். இது 1958இல் சேவையில் ஈடுபடுத்தப்பட்டது.

இராட்சத ஜெற் விமானத்தொடரில், போயிங் கொம்பனி 1970 ஜனவரியில் 'போயிங் 747 ஜம்போ ஜெற்' விமானத்தை சேவையில் ஈடுபடுத்தியது. இது 300 பேருக்கு மேல் ஏற்றக் கூடியது. 4 'ரேபோ பான்' இயந்திரங்கள் பொருத்தப்பட்டவை.

பின்னர் 747 என்ற நம்பரில் உபநம்பர்களை சேர்த்து பல பிரிவுகளில் பெரிய விமானங்கள் செய்யப்பட்டன இவற்றுள்போயிங் 747—200 B என்ற விமானத்தின் தரவுகள் பின்வருமாறு:-

★ 4 இராட்சத ''ரேபோ பான்'' Fan) இயந்திரங்கள் ஒவ்வொன்றும் 50 000 றாத்தல் உந்துவிசையை உருவாக்கும்

★ பயணிகள் எண்ணிக்கை 516

★ எண்ணெய் கொள்ளளவு ·0, 000 கலன்கள்

★ ஒரு நிமிடத்தில்25,800 இறாத்தல் எண்ணெய் எரிக்கும்.

★ செட்டைகளின் நீளம் 195 அடி

★ முழு நீளம் 231 அடி உயரம் 65 அடி

★ சுமை ஏற்றமுன் நிறை

**எஸ் சி. இமானுவேல்**
(பொறியியலாளர்)

175 தொன்

★ சுமை ஏற்றிய பின் நிறை 360 தொன்

★ உயர் வேகம் மணித்தியாலயத்திற்கு 600 மைல்

★ உடலமைப்பு அகலம் 20 அடிக்கு மேல் ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல்கலைக்கழக பேரவைக்கு

# கத்தோலிக்கர் ஒருவரை நியமிக்குமாறு கோரிக்கை

## யாழ். ஆயர் வேண்டுகோள்

கொழும்பு, பெப். 12 யாழ். பல்கலைக்கழகத்தால் பேரவைக்கு கத்தோலிக்கர் ஒருவரை நியமிக்குமாறு பல்கலைக்கழக மானிய ஆணைக் குழுவிடம் யாழ். ஆயர் வண தோமஸ் சௌந்தரநாயகம் வேண்டுகோள் விடுத்திருக்கிறார்.

''யாழ். பல்கலைக்கழகத்தில் கணிசமான எண்ணிக்கையில் கத்தோலிக்க மாணவர்கள் கல்வி பயில்கின்றனர். கத்தோலிக்க திருச்சபை பல்கலைக்கழகத்தின் வளர்ச்சிக்கு எப்போதும் உழைத்து வருகின்றது''— இவ்வாறு பல்கலைக்கழக மானிய ஆணைக் குழுவின் தலைவருக்கு எழுதியுள்ள கடிதத்தில் யாழ். ஆயர் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம் சென். சேவியர் குருப் பாடசாலையின் தலைமைக் குருவான வண. பிதா டாக்டர். எஸ். ஜே. மனுவேல்தாஸை மேற்படி பதவிக்கு தாம் சிபார்சு செய்வதாகவும் ஆயர் இக்கடிதத்தில் குறிப்பிட்டிருக்கிறார். (உ)

## விசேட கூட்டம்

வடமராட்சி சுருக்கெழுத்துக் கழக மாணவர்கள் பழைய மாணவர்கள், உறுப்பினர்கள் பங்குபற்றும் விசேட கூட்டம் **14-2-95** செவ்வாய் காலை **10** மணிக்கு அல்வாய் சின்னத்தம்பி வித்தியாலயத்தில் நடைபெறும். தொடர்புடையவர்கள் தவறாது சமுகந்தரவும்.

(சி-545) செயலாளர்.

## மரண அறிவித்தல்கள்

### ஆறுமுகம் சுந்தரலிங்கம்

*(வர்த்தகரும், பத்திரிகை முகவரும்)*

37, சிவப்பிரகாசம் வீதி, வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஆறுமுகம் சுந்தரலிங்கம் காலமானார்.

இவர் காலஞ்சென்ற ஆறுமுகம் பறுவதம் தம்பதிகளின் மகனும், பாலச்சந்திரேஸ்வரியின் அன்புக் கணவரும், செல்வி பத்மினி (போராளி), செல்வி பிருந்தா (யா. இ. ம. க). செல்வன் ரமேஸ், செல்வி பிரசாந்தி (யா. இ. ம. க) ஆகியோரின் அன்புத் தந்தையாரும், பாலசுப்பிரமணியம், திருமதி சண்முகநாதன், திருமதி நல்லையா, செல்வி திருக்கேதீஸ்வரி, காலஞ்சென்ற விக்னேஸ்வரன் (மாவீரர்) ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்ற நல்லையா, சண்முகநாதன், காலஞ்சென்ற திருமதி பாலசுப்பிரமணியம் ஆகியோரின் அன்பு மைத்துனரும், சுபாஜினி (போராளி), சுதாகரன்) (பெ பு ம வி.), சுதாசினி (யா. இ. ம. க.) சுதாமதி (யா. இ. ம. க.), சுலோசினி (யா. இ. ம. க. ஆ. பாடசாலை), சுகந்தி (போராளி), ராகினி (கா. துறை) ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியை இன்று காலை 10 மணிக்கு நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக கோம்பயன்மணல் மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
திருமதி சுந்தரலிங்கம்
(மனைவி)

(சி/546)

### ஏரம்பு பசுபதிப்பிள்ளை

[செட்டியார்]

வேலணை மேற்கு 8 ஆம் வட்டாரம் தலைகாட்டியைப் பிறப்பிடமாகவும் தற்போது கொக்குவில் மேற்கு சிவகுரு வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட ஏரம்பு பசுபதிப்பிள்ளை அவர்கள் 11-02-95 அன்று காலமானார்.

இவர் காலஞ்சென்றவர்களான ஏரம்பு செல்லமுத்து தம்பதிகளின் ஏகபுத்திரனும், காலஞ்சென்றவர்களான நமசிவாயம் பார்பதிப்பிள்ளை தம்பதிகளின் அருமை மருமகனும், காலஞ்சென்ற புனிதவதியின் அன்புக் கணவரும், லலிதாதேவி, சர்வேஸ்வரி, சிவநேசன், லோகநாதன், பத்மநாதன், கலைவாணி குகதாசன், சிவகுமார் ஆகியோரின் அருமைத் தந்தையும், பூபாலபிள்ளை, சண்முகரெத்தினம், சியாமளா, யோகேஸ்வரன் ஆகியோரின் அன்பு மாமனாரும், காலஞ்சென்றவர்களான அன்னம்மா, இராசம்மா மற்றும் மீனாட்சி, காமாட்சி, நாகம்மா ஆகியோரின் அன்புச் சகோதரனும், சோமசுந்தரம், சபாரெத்தினம், காலஞ்சென்ற சண்முகம், ஞானசிவம், கோபாலபிள்ளை மற்றும் காலஞ்சென்ற கைலாசபதி, மலர்மகள், செவ்வந்திநாதன் ஆகியோரின் அன்பு மைத்துனரும், கஜமுகன், கயல்விழி, நர்மதா, நமசிவாயம், மயூரன், சண்முகப்பிரியா, சொரூபன், சிந்துஜா, அபிராமி ஆதித்தன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று [12-02-95] ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக கோம்பயன்மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
ந. பூபாலபிள்ளை
[மருமகன்]

சிவகுரு வீதி,
கொக்குவில் மேற்கு,
கொக்குவில்.

[35167]

### செல்வி பராசக்தி சந்திரசேகரம்

இல. 182/2, நாவலர் வீதி, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த செல்வி பராசக்தி [சுகந்தி] சந்திரசேகரம் 10-02-95 இல் காலமானார்.

அன்னார் திரு சந்திரசேகரம், காலஞ்சென்ற திருமதி நாகேஸ்வரி ஆகியோரின் பாசமிகு மகளும், திருமதி மகேஸ்வரி முரளிதரன், ஜெயபாலன் [லெபனான்], பத்மினி (போராளி), சிலோமினா (போராளி), லதன் (போராளி) ஆகியோரின் அன்புச் சகோதரியும், திரு. முரளிதரனின் மைத்துனியும் ஆவார்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

தகவல்:
குடும்பத்தினர்

[35170]

## கராஜ் உரிமையாளர் கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், பெப். 12 மோட்டார் ஊர்திகள் திருத்தும் கராஜ் உரிமையாளர்களுக்கான கலந்துரையாடல் ஒன்றை தமிழீழ மோட்டார் ஊர்திப் பதிவுப் பகுதியினர் ஒழுங்கு செய்துள்ளனர்.

இக்கலந்துரையாடல் இன்று ஞாயிறு காலை 9.00 மணிக்கு கோண்டாவிலில் அமைந்துள்ள யாழ். மாவட்ட அரசியல்துறைச் செயலகத்தில் நடைபெறும்.

இதில் தவறாது கலந்து கொள்ளுமாறு கராஜ் உரிமையாளர்களை போக்குவரத்துக் கண்காணிப்புப் பிரிவின் மோட்டார் ஊர்திப் பதிவுப் பகுதியினர் கேட்டுக் கொள்கின்றனர். (இ)

### சீனப் பெண்---

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

ருக்குத் தொடர்பிருப்பதாக இரகசியப் பொலிஸார் சந்தேகம் தெரிவிக்கின்றனர்.

கடத்தல் குற்றச்சாட்டுக்களின் பேரில் கைது செய்யப்பட்டு ஹொங்கொங் சிறையில் வைக்கப்பட்டிருந்த இப்பெண், பின்னர் பிணையில் விடப்பட்டபோது அங்கிருந்து ஸ்ரீலங்காவுக்கு தப்பி ஓடி வந்தார் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

மோசடி செய்யப்பட்ட பாஸ்போர்ட்டில் ஸ்ரீலங்காவுக்குள் புகுந்த இப்பெண்மணி, கைது செய்யப்பட்ட சமயம் மேலும் பல மோசடி செய்யப்பட்ட பாஸ்போர்ட்டுகளையும் பயண ஆவணங்களையும் வைத்திருந்தார் என்று இரகசியப் பொலிஸார் தெரிவித்தனர்.

கடந்த வியாழனன்று கொழும்பு மேல் நீதி மன்றத்தில் ஆஜர் செய்யப்பட்ட இப்பெண்ணை மார்ச் 8 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கும்படி நீதிபதி லெஸ்லி அபேசேகரா உத்தரவிட்டார்.

இந்தப் பெண்ணை விசாரணை செய்வதற்காக பாரிசிலிருந்து ''இன்டர்போல்'' நிறுவன அதிகாரிகள் கடந்த வெள்ளியன்று கொழும்பு வரவிருந்தனர். (உ)

### அரசு..

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

தொலைநோக்குடனும் விடுதலைப் புலிகள் இயக்கத்துடன் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்க எடுத்த முயற்சிகளை பாராட்டுகிறோம்.

அரசாங்கத்துடன் சமாதானப் பேச்சுவார்த்தைகளை நடத்துமாறு அமெரிக்கா விடுதலைப் புலிகளைக் கேட்டுள்ளது.

கணிசமான அளவு அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபட வேண்டும் என்றும் விடுதலைப் புலிகளை கேட்டுள்ளோம்—என்றார். [ஐ 3-4]

### கொழும்பு,---

(1ஆம் பக்கத் தொடர்ச்சி]

இரு சம்பவங்கள் தொடர்பாகவும் இந்த ஆணைக்குழு தனித்தனியே விசாரணைகளை நடத்தும்.

இவ்விரு சம்பவங்கள் தொடர்பாகவும் முன்னர் நடத்தப்பட்ட விசாரணைகளின் முறைகள் பற்றியும், முடிவுகள் குறித்தும் தொடர்ந்து திருப்தியின்மை நிலவிவருவதை அடுத்தே புதிய விசாரணைக் குழுவை அரசு நியமித்துள்ளது.

இவ்விரு கொலைச் சம்பவங்கள் தொடர்பாக முக்கிய தகவல்கள் தெரிந்திருந்தும் பீதி அல்லது வேறு காரணங்களுக்காக அவற்றை தெரிவிக்கத் தவறியவர்களுக்கு தற்போது சந்தர்ப்பம் வழங்கப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. (ஐ-க-4)

### மன்னிப்புச்---

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

கொலை சம்பவங்கள் பற்றியும் விசாரணை நடத்தி வரும் இலங்கைக் குழுக்களை சந்திக்கவுள்ள மன்னிப்புச் சபைப் பிரதிநிதிகள், இங்குள்ள நிலைமைகள் குறித்து ஆராயவுள்ளனர்.

இவர்கள் நாடாளுமன்ற உறுப்பினர்களையும், மனித உரிமை மீறல்களினால் பாதிக்கப்பட்டவர்களையும் சந்திக்கவுள்ளனர். (ஐ-5)

# போர் இடைநிறுத்த...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

தமது பணியை ஆரம்பிக்க முடியாது என கண்காணிப்பு குழுவின் வெளிநாட்டு பிரதிகள் தெரிவித்தனர்.

இன்னும் இரு வாரங்களுக்குள் இது குறித்து பேசி முடிவு கண்டபின் கண்காணிப்பு பணியை ஆரம்பிக்கக் கூடியதாக இருக்கும் என்று அரச தரப்பு பிரதிநிதியான பிரிகேடியர் சிறி பீரிஸ் கூறியிருந்தார்.

### பேச்சும் செயலும்

இவ்வாறே அரசாங்கம் பல விடயங்களில் பேசுவது ஒன்றும், செய்வது ஒன்றாகவும் இருப்பது தான் இன்றைய நிலையாக உள்ளது.

அரசியல் தீர்வையோ அரசியல் பேச்சுவார்த்தைகளையோ விடுதலைப் புலிகள் புறந்தள்ளவில்லை

ஆயினும் எமக்கு 40 ஆண்டுகளுக்கு மேற்பட்ட வரலாறு உள்ளது. எமது மக்களுக்கு ஓர் உரிமைப் போராட்ட வரலாறு இருக்கிறது.

நாங்கள் பல காலங்களில் பல ஒப்பந்தங்களால் — வாக்குறுதிகளால் — ஏமாற்றப்பட்டுள்ளோம். இந்த ஏமாற்றத்தின் விளைவுதான் பெருமளவிலான எமது பக்களின் அழிவுக்கும் எமது பிரதேசத்தின் இன்றைய பின்தங்கிய நிலைக்கும் காரணமாகும்.

### எமக்கு உறுதி தேவை

இன்றைய நிலையில், இருப்பவர்களை மட்டுமல்ல எம்மை விட்டுப் பிரிந்த ஆயிரக்கணக்கான போராளிகளையும், மக்களையும் நாம் நினைவுகூர வேண்டிய நிலையில் இருக்கிறோம்.

எமது மக்களின் உரிமைக்காகவும் சுபிட்சத்திற்காகவுமாக இவர்கள் தம்மையே அர்ப்பணித்துள்ளனர். எனவே அவர்களது எதிர்பார்ப்புக்கு ஏற்ப மக்களின் உரிமைகள் முழுமையாகக் கிடைக்க கூடியதான ஒரு தீர்வை அரசு முன்வைக்க வேண்டும். இதில் நாம் மிகவும் உறுதியாக இருக்க வேண்டும்.

### பொருளாதார தடைநீக்கம்

மக்களின் அன்றாடப் பிரச்சினைகளில் ஒன்றான பொருளாதாரத் தடை நீக்கம் தொடர்பான விடயம் மூன்றாம் கட்டப் பேச்சில் இடம் பெற்றது.

பொருள்கள் மீதான தடை நீக்கம் பற்றி அரச பிரதிநிதிகள் எம்மிடம் கூறினர்.

ஆனால் அவர்கள் கொழும்புக்குச் சென்றபின் நிலைமை வேறாகி விட்டது,

பொருளாதாரத் தடையினால் இலாபமடையும் இராணுவ அதிகாரிகளுடன் அரச பிரதிநிதிகள் பேசிய போது தடையை நீக்க அவர்கள் மறுத்துள்ளனர். உடனே நிலைமை தலை கீழாகி விட்டது.

இதிலிருந்து ஒன்றை விளங்கிக் கொள்ள முடிகிறது

அரசியல் தலைவர்களோடும், அமைச்சுச் செயலாளர்களோடும் பேசி பிரயோசனமில்லை.

இராணுவ ஜெனரல்களோடும், அதிகாரிகளோடும் தான் எமது பேச்சு வார்த்தையை நடத்த வேண்டிய நிலை இருப்பதாகவே தெரிகிறது

ஏனெனில் அரசியல் தலைவர்கள் பேச்சில் கலந்து கொண்டாலும் முடிவுகள் அனைத்தும் இராணுவ நலன்களை பிரதானமாகக் கொண்டே எடுக்கப்படுகின்றன.

### துப்பாக்கிக்கு சற்று ஓய்வு

மூன்று கட்டங்களாக நடந்த பேச்சுக்களின் விளைவு துப்பாக்கிகளை சற்று ஓய்வு எடுக்க மட்டுமே செய்துள்ளது

ஆனால் அரசினால் உறுதி வழங்கப்பட்ட எமது மக்களுக்கான விடயங்கள் நடை-

முறைப்படுத்தப்படவில்லை.

இவ்வருடம் பாதுகாப்புக்கென பலகோடி ரூபாக்கள் மேலதிகமாக ஒதுக்கப்பட்டுள்ளன.

ஒரு பக்கம் அரசியல் பேச்சுவார்த்தை, அரசியல் தீர்வு, மறுபக்கம் இராணுவ புனரமைப்பு, புதிதாக ஆட் சேர்ப்பு தளபாடங்கள் கொள்வனவு என அரசு செயற்படுகிறது.

இந்தப் போர் இடை நிறுத்தமும், பேச்சுவார்த்தை காலகட்டமும் தங்களை வளர்த்துக் கொள்வதற்காகவே —

மீண்டும் எமது மக்களை இராணுவ ரீதியாக நசுக்குவதற்கான திட்டங்களை மேற்கொள்வதற்காகவே என நாம் எண்ணவேண்டியுள்ளது.

ஒரு பக்கம் சமாதானம், தமிழர்களுக்கான தீர்வு எனக் காட்டிக்கொண்டு மறுபக்கம் தம்மைப் பலப்படுத்தி, பேச்சுவார்த்தையைக் குழப்பி பெரியதொரு யுத்தம் மூலம் தமது எதிர்பார்ப்புகளை நிறைவேற்றிக் கொள்ளலாம் என்ற நிலையில்தான் அரசு இருப்பதுபோல் உள்ளது.

### புலிகள் நிபந்தனை விதிக்கவில்லை

தமிழர்களுக்கான உரிமைகளைத் தாம் வழங்கத் தயாராக இருப்பதாகவும், ஆனால் விடுதலைப் புலிகள் புதிய நிபந்தனைகளைப் போட்டுக் கொண்டுள்ளனர் என ஸ்ரீலங்கா தொடர்பு சாதனங்கள் மூலம் பிரசாரம் செய்யப்படுகிறது.

விடுதலைப் புலிகள் எதுவித நிபந்தனையையும் விதிக்கவில்லை.

அரசாங்கம் எமக்கு உறுதி அளித்துச் சென்றவற்றைத் தான் நாம் கேட்கிறோம்.

பல அபிவிருத்தி வேலைகளைச் செய்யப்போவதாக அரசு சர்வதேச ரீதியாக பிரசாரம் செய்கிறது. பொருள்களுக்கான தடை விதிக்கப்பட்டுள்ள நிலையில் அபிவிருத்திப் பணிகளை அரசு எவ்வாறு செய்யப்போகிறது?

அரசு போலியான ஒரு தோற்றத்தைக் காட்டி வருகிறது. நேர்மையான ஒரு வழியில் அரசு தனது நடவடிக்கைகளை முன்னெடுக்கவில்லை.

ஆயினும் நாம் அதற்கான வழியைத் திறந்துவிட்டுள்ளோம்.

அரசு இதனைச் சரியாகப் பயன்படுத்தவேண்டும்.

### தீர்வுத் திட்டம் குறித்து தெளிவாகத் தெரிவிப்பு

தனிநாட்டுக் கோரிக்கையை விட்டு இறங்கி வந்து விடுதலைப் புலிகள் பேச்சு நடத்தமாட்டார்கள் என்று முன்னர் ஒரு பிரசாரம் இருந்தது.

ஆனால் எமது தேசியத் தலைவரின் கருத்துக்களும், எமது அறிக்கைகளும் சில தீர்வுத் திட்டங்களின் அடிப்படைகளைக்கூட தெளிவாக விளக்கியுள்ளது.

தீர்வுத் திட்டம் தொடர்பாக விடுதலைப் புலிகள் தெளிவாக அறிக்கைகளை வெளியிட்டுள்ளனர்.

இப்படி திரு தமிழ்ச்செல்வன் கூறினார்.

சந்திரிகாவுக்கு புலிகளால் மிரட்டல், கொலைப் பயமுறுத்தல் எதுவும் விடுக்கப்படவில்லை என்றும் திரு. தமிழ்ச்செல்வன் தமது உரையில் குறிப்பிட்டார்.

தமிழீழக் கல்வி மேம்பாட்டுக் கழகத் தலைவர் வண. பிரான்சிஸ் ஜோசப் அடிகளார் தலைமை உரை நிகழ்த்தினார்.

தமிழீழ கல்விக் கழகப் பொறுப்பாளர் திரு. வெ. இளங்குமரன் யாழ். பல்கலைக்கழக தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் அ.சண்முகதாஸ், மேலதிக அரசாங்க அதிபர் திருமதி ப. திலகநாயகம்போல், வலயம் - 1 கல்விப் பணிப்பாளர் செல்வி. தி. பெரியதம்பி உட்பட பலர் கூட்டத்தில் உரை நிகழ்த்தினர்.

தமிழீழ கல்வி மேம்பாட்டுப் பேரவையின் கல்வித் தேர்வில் சிறப்புச் சித்திகளை பெற்ற மாணவர்களுக்கு பரிசில்கள், சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

(இ-ஐ-14-111)

### எதிர்க்கு...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஆயினும் சமாதானத்தை ஏற்படுத்த மக்கள் கொண்டுள்ள பேரவாவை நான் முன்பு குறிப்பிட்டிருந்தேன் எனவே படையினர் அனைவரும் சமாதானத்தை ஏற்படுத்த அரசு எடுக்கும் முயற்சிக்கு பூரண ஒத்துழைப்பு வழங்கிச் செயற்பட வேண்டும். (ஐ-6)

### ஸ்ரீமாவோ சுகயீனம்

கொழும்பு, பெப். 12 பிரதமர் ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா சுகயீனம் அடைந்திருப்பதாக கொழும்பு பத்திரிகைகளில் நேற்று செய்தி வெளியாகியிருந்தது. (ஐ-ச)

### ஹமில்டன் கடவுச...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

என்று அவரிடம் தெரிவித்தேன்.

அதனையடுத்து கடவுச்சீட்டை பறிமுதல் செய்ய வேண்டிய அவசியம் இல்லை என ஜனாதிபதி குடிவரவு, குடியகல்வு அதிகாரிகளைப் பணித்தார். இப்போது எனது கடவுச்சீட்டு என்னிடமே உள்ளது. — என்று அவர் பேட்டியில் தெரிவித்தார். (இ-ஐ-6)

# அத்தனகல தொகுதியில் புலிகள் நடமாட்டமாம்


பண்டாரநாயக்கா குடும்பத்தவர்களின் செல்வாக்கு மிக்க அத்தனகல தொகுதியில் விடுதலைப் புலிகளின் நடமாட்டம் அதிகரித்துள்ளதாகவும்—

அங்கு பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டுள்ளதாகவும்— சிங்களப்பத்திரிகையான 'திவயின' நேற்று செய்தி வெளியிட்டுள்ளது.

அத்தனகல தொகுதியில் உள்ள ஹொரகொல்லவில் பண்டாரநாயக்காவின் சிலையை படமெடுத்த தமிழ் இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்டிருந்தமை தெரிந்ததே.

அத்தனகல பகுதியில் புலிகள் நடமாடுவதாக பொலிஸ் உயர்வட்டாரங்கள் தற்போது தகவல் வெளியிட்டுள்ளன. (ஒ-3)


உ


சிவமயம்
திருச்சிற்றம்பலம்
நமச்சிவாய வாழ்க
நாதன் தாள் வாழ்க


## இந்து சமய அபிவிருத்திச் சபை

சுன்னாகம்

## திருவாசகத் தேனமுதம் ★ நிகழ்ச்சியும் ★ 'தூண்டு சுடர்' முதல் இதழ் ★ வெளியீட்டு விழாவும் ★

இடம் : ஸ்ரீ கதிரமலை சிவன் ஆலயம் சுன்னாகம்

காலம் : இன்று **(12-02-95)** ஞாயிறு காலை 8 மணி முதல்

தலைமை : உயர்திரு. ஆ. மகாலிங்கம் அவர்கள் எங்கள் ஸ்தாபகத் தலைவர்

அனைவரையும் குறித்த நேரத்தில் சமுகம் தரும்படி அன்புடன் அழைக்கின்றோம்.

ந. செல்லையா
செயலாளர்

சுன்னாகம்.

வாழ்த்துகின்றோம்:
திருநெறிய திருமுறைச்செல்வம்

(சி-5779)

JAFFNA COLLEGE CEYLON

## யாழ்ப்பாணக் கல்லூரி

## பட்டதாரிப் பிரிவு

464, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

## COMMUNICATION STUDIES

## தொடர்பாடற் கற்கை நெறி

விரிவுரைகள் **04-02-1995** இல் ஆரம்பமாகி நடைபெறுகின்றன. கற்கை நெறியில் சேர்ந்து கொள்ள விரும்புபவர்கள் விரைவில் இணைந்து பயன் பெறவும்.

★ G.A.Q பரீட்சைக்குத் தோற்றுவோரும், இதழியல் — தொடர்பாடற் துறைகளில் தொழில் புரிவோரும் தம் துறைசார் அறிவை வளர்த்துக் கொள்ள அரிய வாய்ப்பு.

விரிவுரைகள் சனிக்கிழமைகளில் மு.ப. 11-30 — பி.ப. 1-30 வரை

விசேட விரிவுரைகள் பொது விடுமுறை தினங்களில் **14-02-1995** செவ்வாய்க்கிழமை மு.ப. 8-30— பி.ப. 1-00 வரை

விரிவுரையாளர்கள்

திரு. E. R. திருச்செல்வம்
திரு. I. சங்கர்

துறைசார் அறிஞர்களால் பொது விரிவுரைகளும் கற்கைநெறியின் இறுதியில் நடத்தப்படும்.

(சி-378)


## மரண அறிவித்தல்

### செல்லத்துரை தட்சணாமூர்த்தி

புங்குடுதீவு 10 ஆம் வட்டாரம் கண்ணகைபுரத்தை பிறப்பிடமாகக் கொண்ட செல்லத்துரை தட்சணாமூர்த்தி சுவிஸில் காலமானார்.

இவர் செல்லத்துரை, காலஞ்சென்ற மாரிமுத்து தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்ற தருமலிங்கம், மற்றும் பொன்னம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும், கிரிஜாம்பாளின் அருமைக் கணவரும், மதன், தர்சினி, தட்சாயினி, நிஷாந் [புங். ஸ்ரீகணேச ம. வித்தியாலய மாணவர்] ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற நீலகண்டன், மற்றும் சிவசோதி, கண்ணசமூர்த்தி, நவரத்தினராஜா ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அவரின் ஈமக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்,
த. மதன் [மகன்]

29, அச்சுக்கூட வீதி,
தலையாளி, கொக்குவில்.

[35171]

இப்பத்திரிகை நி(யூ உதயன் பப்ளிகேசன்ஸ் லிமிடெட்) சார்பில் ... சிற்றெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 892/2 இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 12-02-1995 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org